# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 22 வியாழக்கிழமை (04-05-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:136


# இலங்கைக்கு இராணுவ உதவி

# எதையும் இந்தியா வழங்காது!

## அந்த நாட்டு அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிப்பு

புதுடில்லி,மே4

**இலங்கைக்கு இராணுவ உதவி எதனையும் வழங்கும் உத்தேசம் இந்தியாவுக்கு இல்லை.**

**இந்தியாவின் இந்த முடிவை அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் திட்டவட்டமாக அறிவித்தார்.**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் நேற்றுக் காலை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசியகையோடு, இந்தியப் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழு பிரதமர் வாஜ்பாய் தலைமையில் புதுடில்லியில் கூடியது.

இந்தக் கூட்டத்தின் பின்னரே

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

# யாழ்.குடாநாட்டிலிருந்து படைகளை வெளியேற்றும் எண்ணமே இல்லை!

கொழும்பு,மே4

* விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் உக்கிரமாகத் தொடரும். புலிகளின் சகல தாக்குதல்களுக்கும் தக்க பதிலடி - தக்க தருணத்தில் - வழங்கப்படும்.

* குடாநாட்டிலிருந்து படையினரை வெளியேற்றும் எண்ணம் ஏதும் எமக்கு இல்லை.

- இப்படி அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அலரிமாளிகையில் நேற்றுக் காலை இடம்பெற்ற - அரசில் அங்கம் வகிக்கின்ற - கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சந்திப்பு ஒன்றிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

"ஆனையிறவு முகாமைப் புலிகள் கைப்பற்றியுள்ளமை படையினருக்குப் பெரும் பின்னடைவுதான். எனினும் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல் நடத்தப்படும்.

அண்மைக் காலத்தில் படையினருக்குத் தொடர்ச்சியாகப் பின்னடைவுகள் ஏற்பட்டுவருவது உண்மைதான். ஆனால் அவை நிரந்தரப் பின்னடைவுகள் அல்ல. அவை நிரந்தரப் பின்னடைவு என்று கூறுபவர்கள் தேசத்துரோகிகள்.

ஐ.தே.கட்சி அரசாங்கம் எம்மிடம் யாழ்ப்பாணத்தை ஒப்படைக்கும்போது பலாலி, ஆனையிறவு மற்றும் பூநகரி ஆகிய முகாம்களில் மட்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வாஜ்பாயைச் சந்தித்து கதிர்காமர் யாழ்.நிலைமை குறித்து விளக்கம்

மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவிலதங்கியுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் இந்தியப் பிரதமர் வாஜ்பாயை நேற்றுக் காலை புதுடில்லியில் சந்தித்துப் பேசினார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் மங்கள முனசிங்கவும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினார்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்துப் பிரதமர் வாஜ்பாய்க்கு இலங்கை அமைச்சர் விளக்கியதாகக் கூறப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்காக இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கை எதனையும் இந்தச் சந்திப்பின் போது கதிர்காமர் முன்வைத்தாரா என்பது தெரியவரவில்லை.

ஆனால் இந்தச் சந்திப்பை அடுத்து அவசரமாகக் கூடிய இந்திய அமைச்சரவையின் பாதுகாப்புக்குழு, இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவி எதனையும் வழங்குவதில்லை என்ற அறிவிப்பை பின்னர் விடுத்தது குறிப்பிடத்தக்கது. (உ-6-9)

## இந்திய இராணுவ உதவியை கோரும் சாத்தியம் உண்டு

### லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

புதுடில்லி,மே4

"இந்தியாவிடம் இராணுவ உதவியைக் கோரும் சாத்தியங்கள் உண்டு."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர்.

இந்தியாவில் தங்கியிருக்கும் அவர், நேற்றுக் காலை இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேச முன்னர் செய்தி நிறுவனங்களுக்கு வழங்கிய பேட்டிகளிலேயே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

"வெளிநாட்டு இராணுவ உதவியைக் கோரும் சாத்தியம் ஏற்படலாம். இத்தகைய உதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் இலங்கைக்கு அருகில் இல்லை. எனவே இது குறித்து இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தகைய வேண்டுகோள் விடுக்கப்படும் சாத்தியமும் உள்ளது.

அதற்கு இந்தியா இணங்கமாட்டாது என்று கூறுவதற்கு எவ்வித காரணமும் இல்லை.

மனிதாபிமான அடிப்படையில் இத்தகைய ஏற்பாட்டை முன்னெடுப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வாஜ்பாய் அழைப்பை ஏற்று கருணாநிதி புதுடில்லி விரைவு

யாழ்.குடாநாட்டின் போர் நிலைமைகளால் எழுந்துள்ள விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக, இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் அவசர அழைப்பை ஏற்று, தமிழக முதல்வர் மு.கருணாநிதி நேற்று இரவு விசேட விமானத்தில் புதுடில்லி புறப்பட்டுச் சென்றார்.

இலங்கை யுத்த நிலைமை, இது விடயத்தில் தமிழக மக்களின் நிலைப்பாடு ஆகியவை குறித்து கருணாநிதியின் கருத்துக்களை பிரதமர் கேட்டறிவதோடு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த இரு தலைவர்களும் இன்று காலை விரிவாக ஆராய்வர் என்று செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (உ-6-7-9)

# இந்தியச் செய்தியால் இங்கு பெரும் பரபரப்பு!

யாழ்ப்பாணம்,மே4

யாழ்.குடாநாட்டில் புலிகளிடம் சிக்குப்பட்டிருக்கும் சுமார் 40 ஆயிரம் இலங்கைத் துருப்புக்களை குடாநாட்டிலிருந்து பாதுகாப்பாக விலக்குவதற்கு இந்தியாவின் உதவியை இலங்கை கோரியுள்ளது என்ற செய்தி, இந்திய வெகுஜனத் தொடர்பு ஊடகங்களில் நேற்றுக் காலை முதல் ஒளி, ஒலிபரப்பு செய்யப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கைக்கு இராணுவ உதவிகளை இந்தியா வழங்க வேண்டும் என்று பௌத்த பீடாதிபதிகள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் கோரியது -

அதனை அடுத்து இந்தியத் தூதர் சிவ்சங்கர் புதுடில்லி புறப்பட்டுச் சென்றது -

இந்திய இராணுவ உதவி கோரப்படவேண்டும் என்று இலங்கை தேசிய நாளிதழ்கள் சில வலியுறுத்தியமை -

ஆகியவற்றின் பின்னணியில் இத்தகைய செய்தி வெளியானது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியது. (உ-க-6-9)

## இந்தியத் தளபதி இலங்கை வருகிறார்

புதுடில்லி,மே4

இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் ஏ.வை.டிக்னிஸ் ஒருவார கால உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளதாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கிளாலியில் கைப்பற்றப்பட்ட

# 17 படையினரின் சடலங்கள் நேற்று ஒப்படைக்கப்பட்டன

வவுனியா,மே4

கிளாலிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட 17 படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் நேற்று பரந்தனில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்தனர் என்று வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை விடுதலைப் புலிகளால் நேற்றுப் பரந்தனில் வைத்து கையளிக்கப்பட்ட படையினரின் சடலங்கள் யாவும் வவுனியாவில் வைத்துப் படைத்தரப்பிடம் கையளிக்கப்பட்டதாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன நேற்றிரவு செய்திநிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

கடந்த செவ்வாயன்று படைத்தரப்பிடம் கையளிக்கப் பட்ட 42 சடலங்களில் 13 சடலங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் -

ஏனைய சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு சிதைந்திருந்ததால் அவை குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்க விசேட குழு ஒன்று கொழும்பில் இருந்து வவுனியா வந்துள்ளதாகப் படைத்தரப்பு தன்னிடம் தெரிவித்துள்ளதாகவும் -

ஹர்ஷா குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (உ-7)

# கிளாலி இன்னமும் தம்வசம் என்கிறது படைத் தரப்பு

புலிகளின் மோட்டார் தாக்குதல்களுக்கு மத்தியிலும் கிளாலி முகாம் இன்னமும் படையினர் வசமே இருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று யுத்தம் தணிந்திருந்ததாகவும் அவர் கூறினார்.

ஆனையிறவில் இருந்து கிளாலி வரையிலான 12கிலோ மீற்றர் கரையோரப் பாதையும், யாழ். கண்டி வீதியில் ஆனையிறவு தொடக்கம் முகமாலை வரையிலான 21கிலோ மீற்றர் தூரமுள்ள பிரதான வீதியும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

# யாழ்.நிலைமை குறித்து ஜனாதிபதி ஆராய்வு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று பாதுகாப்புக் கவுன்ஸிலைக் கூட்டி யாழ். நிலைமை குறித்து ஆராய்ந்தார்.

இக்கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் கலந்து கொண்டனர்.

அவசர நடவடிக்கைகள் குறித்து ஆராயவே இக்கூட்டம் நடத்தப்பட்டதாகவும் -

இன்னும் ஓரிரு தினங்களில் இந்த நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் -

உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-6)

## NEW SCIENCE COLLEGE
JAFFNA

2000 சடமும் கதிர்ப்பும்

புதன், வெள்ளி 6.30 – 7.30 a.m

மின்னியல்

புதன் 3–5

(75984) திரு.சம்பந்தன் B.Sc.


## அரியாலையில் தேடுதல்

அரியாலைப் பகுதியிலுள்ள ஆனந்தன்வடலிவீதி (மேற்கு), கண்டிவீதி (வடக்கு),கனகரத்தினம் வீதி(கிழக்கு) போன்ற இடங்கள் நேற்று இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டன. அதிகாலையில் ஆரம்பமான இந்தச் சுற்றி வளைப் பின்போது வீடுவீடாகச் சென்று படையினர் தேடுதல் நடத்தினார் கள். காலை 8-30 மணிவரை இந் தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றது. (இ-5)


## இடம் மாற்றம்

இதுவரை காலமும் 275, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வந்த

### அசோகா நகையகம்

நாளை வெள்ளிக்கிழமை (05–05–2000) முதல் 111A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் என்பதை வாடிக்கையா ளர்களுக்கும் நண்பர்களுக்கும் மன மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (75982)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

04-05-2000



### செல்வி பாலசதீஸ்சர்மா லக்ஸ்சினி

பருத்தித்துறையைச் சேர்ந்த சதீஸ் – ஜெனனி தம்பதிகளின் செல்வப்புதல்வி லக்ஸ்சினி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (04-05-2000) வியாழக் கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டா டுகின்றார். அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமா, பெரியம்மா, அப்பப்பா, சித்திமார், சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் லக்ஸ்சினியை சகல கலைகளையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்து கின்றார்கள்.

தகவல்
பாலசதீஸ்சர்மா
பருத்தித்துறை

(C/12024)


## SHAMROCK
A/L 2002
* C.MATHS
Mr.தவசேகர், B.Sc.
Mon, Tue, Thurs, Fri
6.15 a.m
* A/L 2002 புவியியல்
Mr.ராஜா (C/12032)



## ராஜா
யாழ்ப்பாணம்.
4ஆவது வெற்றி வாரமாக
அஜித், ஷாலினி
நடிப்பில்
அமர்க்களம்
காட்சிகள் 10.30, 2.30, (C/11604)



## நாகம்ஸ்
சுன்னாகம்.
விஜய், ஷாலினி,
நடித்த
கண்ணுக்குள் நிலவு
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்) (75981)



## லிபேட்டி
அச்சுவேலி.
இன்று முதல்
பார்த்திபன், பிரபுதேவா, கௌசல்யா
நடிப்பில்
ஜேம்ஸ் பாண்ட்
(புதிய வெளியீடு)
காட்சிகள் :10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX No. 0094 - 70212223 (75816)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தந்தையார்

### திரு. சு.இராசேந்திரம்

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை யாக்கி குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/ கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தி. (75983)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 - 05 - 1928

மறைவு 16 - 04 - 1999

அமரர்

### விசயரத்தினம் இராசையா

(ஓய்வு பெற்ற உதவி நிலஅளவை அத்தியட்சகர்)

திதி: 04–05–2000

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய் விளங்கிய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திக்கிறோம்.

தம்பையா பண்டிதர் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

உங்கள் நினைவில்
குடும்பத்தினர். (75937)

## WELL DONE!

We congratulate our under - 19 Net Ball team which emerged as Champions at the Divisional, Zonal and also at the Sub - Provincial level. We wish them Success at the Provincial level too.

Interact Club
of
Uduvil Girls' College.

(75974)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 22 - 09 - 1923

உதிர்வு 04 - 04 - 2000

அமரர்

### வீரவாகு கந்தையா மாணிக்கவாசகர்

அன்பினைப் பேணி எங்கள்
எழுவரை வளர்த்தீர் ஐயா!
இன்பமாய் அனைவரதும்
இல்லறம் கண்டு வாழ்ந்தீர்.
பண்புடன் பேரர் பேர்த்தி
பணிவிடை செய்து வாழ்ந்தீர்.
மதிப்புடன் சுவிஸ் பிரான்ஸும்
மகிழ்வாய்ச் சென்று மீண்டீர்
இன்றேனோ எம்மை விட்டு
விண்ணுலகு ஏகினீரோ?
வெளியிலும் இங்குமாக
வெம்பியே அழுகிறோம் - நாம்
ஐயா! நீ வந்துவிடு - அன்றேல்
ஆத்மா சாந்தி பெறட்டும்.

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.
(75872)

## நீங்காத நினைவலைகள்

### 31 ஆம் நாள்



திருமதி பத்மாவதி ஜெகநாதன்
(பேபி அக்கா-
ஓய்வு பெற்ற ஆசிரியை)

உதயம் : 04-03-1925
அஸ்தமனம் : 04-04-2000

### 5 ஆம் ஆண்டு



அழகரத்தினம் ஜெகநாதன்
(ஓய்வுபெற்ற பொறியியலாளர்,
ஏயர் சிலோன்/ஏயர் லங்கா)

உதயம் : 19-06-1924
அஸ்தமனம் : 06-05-1995

உடல்கள் கருகலாம் – ஆனால்
உணர்வுகள் உதிர்வதில்லை
நீங்கள் பிரியலாம் – உங்கள்
நினைவுகள் இறப்பதில்லை

அ.விக்னேஸ்வரன்
46,வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

பாசமுடன்
சகோதர சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள், மச்சான்மார், மச்சாள்மார், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர், நண்பர்கள் (75701)

## பங்களாதேஷில் வீசிய புயலில்

# இரு படகுகள் ஆற்றில் கவிழ்ந்தன!

# 43 பேர் பலி; பலரைக் காணவில்லை!!

டாக்கா, மே 4

பங்களாதேஷின் கிழக்குப் பகுதியில் இருபடகுகள் ஆற்றில் கவிழ்ந்து மூழ்கியதில் 43 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காணாமல் போய்விட்டனர். இவர்கள் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விபத்தில் சிக்கிய இரு படகுகளிலும் தலா 150 பேருக்கும் மேற்பட்டோர் பயணம் செய்துள்ளனர்.

நடு ஆற்றில் இந்தப் படகுகள் சென்றுகொண்டிருந்த போது மழையுடன் கடும் புயல் காற்று வீசத்துவங்கியது.

ஏற்கனவே அளவிற்கு அதிகமான பயணிகளை ஏற்றிய தன் காரணமாக தடுமாறிய படகுகள் பலமான புயல் காற்றினால் கவிழ்ந்து ஆற்றில் மூழ்கிவிட்டன.

அந்தச் சமயம் வேறு படகுகளில் வந்தவர்கள் சிலரைக் காப்பாற்றியுள்ளனர். மேலும் சிலர் தாமாக நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

ஆனால் படகில் பெண்களும், குழந்தைகளும் அதிகளவில் இருந்ததால் உயிர்ப் பலி அதிகரித்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பலியானவர்களின் சடலங்களை மீட்கும் பணி நடைபெறுகிறது.

அத்துடன் ஆற்றின் போக்கில் அடித்துச் செல்லப்பட்டவர்கள் உயிர் தப்பி உள்ளார்களா? என்றும் தேடி வருவதாகக் கூறப்படுகிறது.

(இ-ஒ)

## இருபாலாருக்கும் சம உரிமை

அம்மான், மே 4

ஆண்களுக்கு நிகராகப் பெண்களையும் அனைத்து வகைகளிலும் சமமாக நடத்துவது குறித்து புதிய உலக நடைமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாடாளுமன்றத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜோர்தானில் நடைபெற்ற மன்ற மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு உள்ளிட்ட சகல துறைகளிலும் இருபாலாருக்குமான சம உரிமையை உருவாக்க நாடாளுமன்ற சங்கம் உறுதி எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

(இ-ஒ)

## இரண்டு பணயக் கைதிகள் பிலிப்பைன்ஸில் மரணம்

மணிலா, மே 4

இஸ்லாமியத் தீவிரவாதிகளால் தெற்கு பிலிப்பைன்ஸில் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு பெண் உட்பட இருவர் இறந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

தீவிரவாதத் தலைவர் ஒருவர் இந்தத் தகவலைத் தெரியப்படுத்தியதாக அந்த நாட்டுத்தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இறந்த இருவரும் மேலை நாட்டைச் சேர்ந்தவர்கள் இவர்களில் பெண் மாரடைப்புக் காரணமாக இறந்ததாகக் கூறப்படுகிறது.

ஆண் இறந்ததற்கான காரணம் தெரியவில்லை.

ஆனால் தீவிரவாதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையே ஏற்பட்டமோதலில் துப்பாக்கிச் சூடு பட்டு அவர் இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

உலக அரங்கில்

இறந்த இருவர் உட்பட 20 பேரை தீவிரவாதிகள் கடத்திப் பணயக் கைதிகளாக வைத்திருந்தது தெரிந்ததே.

(இ-ஒ)

## பாகிஸ்தானில் 'செய்ட்' தலைவர் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், மே 4

பாகிஸ்தானில் சிறுபான்மை இஸ்லாமியப் பிரிவான செய்ட் கட்சித் தலைவர் ஹக்கிம் சபாஸ் ஹுசைன் சைரானி துப்பாக்கிக் குழு ஒன்றால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையின் போது, கொலையாளி ஒருவரும் தவறுதலாகச் சுடப்பட்டதில் இறந்தார்.

சில நாள்களுக்கு முன் செய்ட் கட்சிச் செயலரும் சுட்டுக் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ)

## 'மிர்' விண்வெளி ஆய்வுகூடம் உல்லாசஹோட்டல் ஆகின்றது!

மொஸ்கோ, மே 4

'மிர்' விண்வெளி ஆய்வுகூடத்தை உல்லாச ஹோட்டலாக மாற்றச் சில வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முயற்சி எடுத்து வருகின்றனர்.

அந்த ஆய்வுகூடம் விண்ணில் ஏவப்பட்டு 14 வருடம் ஆகிறது. இதன் காரணமாகத் தொழில் நுட்பக் கோளாறுகள் அடிக்கடி ஏற்படுகிறது. அதனைப் பராமரிக்க ரஷ்ய அரசுக்கு—பொருளாதார நிலை காரணமாக—முடியவில்லை.

அதனால் 'மிர்' ஆய்வுகூடத்தை இந்த வருட இறுதியில் விண்ணிலேயே கைவிட்டுவிட ரஷ்யா தீர்மானித்துள்ளது.

ஆனால் மேற்படி ஆய்வுகூடம் ரஷ்யாவின் விண்வெளி ஆய்வில் பெருமைக்குரியது என்று கருதும் முதலீட்டாளர்கள் வியாபார நோக்குடன் மிர் ஆய்வுகூடத்தைஉல்லாச ஹோட்டலாக்க விரும்புகிறார்கள்.

அதே சமயம் தற்போது இரு ரஷ்ய வீரர்கள் மிர் ஆய்வுகூடத்தில் தங்கியுள்ளனர். அவர்கள் ஆய்வுகூடத்தைக் கைவிடுவதற்கான முதல்கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்

(இ-ஒ)

## அணு ஆயுதம் தொடர்பாக ஆலோசனை

புதுடில்லி, மே 4

அணு ஆயுத விடயத்தில் காங்கிரஸ்கட்சி மேற்கொள்ள வேண்டிய நிலை குறித்து ஆராய அக்கட்சியின் உயர் நிலைக் குழு கூடி ஆராய்ந்து வருகிறது.

அணு ஆயுத விடயத்தில் காங்கிரஸ் கட்சிக்கு நிலையான கொள்கைஎதுவுமில்லை என்று பாரதிய ஜனதாக் கட்சி குறை கூறி வருவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த உயர் நிலைக்குழுவில் மணி சங்கரஐயர், பாட்டியா பிரணாப் முகர்ஜி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். கட்சியின் மூத்த தலைவர் நட்வர் சிங் தலைமையில் ஆலோசனை நடைபெறுகின்றது.

(இ-ஒ)

## ஈரானில் சீர்திருத்தவாதிகளுக்கு சிறைத்தண்டனை

தெஹ்ரான், மே 4

ஈரானில் நான்கு சீர்திருத்தவாதிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர் அக்பர் கஞ்சி, சட்டத்தரணி மெஹ்ரான் கிச்கர், பிரசுரதாரர் சகாலா லஹிஜி மற்றும் மாணவர் தலைவர் அலி அவ்ஷாரி ஆகியோரே சிறையில் அடைக்கப்பட்டவர்கள் ஆவர்.

ஜேர்மனியில் இஸ்லாமிய பழமை வாதக் கருத்துக்கு எதிரான மாநாடு ஒன்றில் பங்குபற்றியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது (இ-ஒ)

## இலங்கைக் கடற்படைக்கு டாக்டர் ராமதாஸ் எச்சரிக்கை

சென்னை மே 4

'இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களை கொல்வதை நிறுத்தாது விட்டால் நாம் திருப்பி அடிக்க வேண்டியிருக்கும்'' என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் எச்சரித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய போது இதனை அவர் தெரிவித்தார்.

மேலும் எமது மீனவர்களை இலங்கைக் கடற்படை கொன்று குவிப்பது இனியும் தொடரக்கூடாது. இதனை இந்திய கப்பல்படை கண்காணிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இலங்கைக்கு இந்தியப் படை அனுப்புவது குறித்துக் கேட்ட போது முன்பு செய்த தவறை இந்தியா இனியும் செய்யாது, செய்யவும் கூடாது என்று டாக்டர் ராமதாஸ் கூறினார். (இ-3)

## சவூதிஅரேபியாவில்

# கொடுமைகளுக்கு ஆளாகும் ஆசியத் தொழிலாளர்கள்

ஹொங்கொங், மே 4

சவூதிஅரேபியாவில் பணிபுரியும் ஆசிய நாட்டவர்கள் உரிமை மீறல்களுக்கு இலக்காவதாக சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆசிய நாடுகளிலிருந்து வறுமையின் காரணமாக சவூதிஅரேபியாவுக்கு வரும் இந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு நேரும் கொடுமைகளை வெளியே சொல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

அதிலும் பெண் தொழிலாளர்கள் பாலியல் கொடுமைகளுக்கும் ஆளாகின்றனர்.

பெரும்பாலான தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தியவர்களால் அடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள்.

தொழிலாளர்களின் கடவுச்சீட்டு பறிக்கப்பட்டு விடுவதால் வேறு வேலைக்குச் செல்லவோ, நாடு திரும்பவோ அவர்களால் முடிவதில்லை.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(இ-ஒ)

## சிறுபான்மையினர் சூட்டுக் கொலை:

# அமெரிக்காவில் வாழும் ஆசியர் எதிர்நோக்கும் வன்முறை அபாயம்

வாஷிங்ரன், மே 4

அமெரிக்காவில் ஓர் இந்தியர் உட்பட 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு வாழும் ஆசிய நாட்டவர் உட்பட சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த மக்களுக்கு எதிராக வன்முறைத் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

பென்சில்வேனியா நகரில் யூதப்பெண் ஒருவர் மூன்று ஆசிய நாட்டவர் இவர்களில் ஒருவர் இந்தியர்— மற்றும் ஓர் ஆபிரிக்கர் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மற்றோர் இந்தியர் கழுத்தில் சூட்டுக் காயத்துக்கு இலக்கானார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக வெள்ளையர் இன சட்டத்தரணி ஒருவரை அமெரிக்க பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இனத்துவேசத்தின் காரணமாகவே இப்படுகொலைகள் நடந்துள்ளதாக இறந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் குற்றவாளியைக் காப்பாற்ற அரசியல் அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதே சமயம்

அமெரிக்க பல்கலைக்கழகத்தில் குற்றவியல்துறை நிபுணரான ஜெவ்ரி ரெய்மன் மனித மனங்களில் அடக்கி வைக்கப்படும் வெறுப்புணர்ச்சி வெடித்துக் கிளம்புவதே இது போன்ற கொலைகளுக்குக் காரணம் என்று கூறியுள்ளார்.

இவரின் கூற்றுப்படி அமெரிக்க சமுதாயத்தின் வெறுப்புணர்வு அங்கு வாழும் ஆசிய நாட்டவர் மற்றும் கறுப்பர் மீது வன்முறையாக மாறும் அபாயம் உள்ளதாகக் கருதப்படுகிறது.

(இ-ஒ)

## தமிழ் நாட்டில் கள்ளச்சாராயம்: கடும் தண்டனை

சென்னை, மே 4

தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் தயாரிப்பவர்கள் மற்றும் விற்பவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதனை முதல்வர் கருணாநிதி சட்டசபையில் தெரிவித்தார்.

தற்போது 3 வருடச் சிறையும் 10 ஆயிரம் ரூபா வரையிலான அபராதமும் கள்ளச் சாராயக் குற்றவாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இது மேற்படி குற்றத்தை தடுக்கப் போதியதாக இல்லை என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

(இ-ஒ)

## ஷெரீப் மீதான தண்டனையை இடைநிறுத்த நீதிமன்றம் தீர்ப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மேன்முறையீட்டுமனு மீதான தீர்ப்புக் கூறும் வரை, அவருக்கு விதிக்கப்பட்ட 10 ஆயிரம் டொலர் அபராதம் மற்றும் சொத்துப் பறிமுதல் ஆகியவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான உத்தரவை சிந்து உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

ஷெரீப்பின்மேல்முறையீட்டு மனு இம்மாதம் 9 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது,

அதே சமயம் ஷெரீப்புக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற அரசு தரப்பு முறையீடு தொடர்பான பூர்வாங்க விசாரணையும் அன்று தொடங்கப்பட உள்ளது

இதற்கிடையில் முன்னாள் பிரதமர் மீதான மேற்படி விசாரணைகள் குறித்து பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் குழு தனது கவலையை வெளியிட்டுள்ளது. (இ-ஒ)

## மூவருக்கு மரண தண்டனை

ரியாத், மே 4

சவூதி அரேபியாவில் இரண்டு இந்தியர்கள் உட்பட மூன்று பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்த மூவரும் சவூதி அரேபியாவில் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிந்தவர்கள்.

இவர்களில் ஓர் இந்தியர் மீது அவரின் மனைவியைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மற்றைய இந்தியர்வேறொருவரின் பணத்தைத் திருடியதாகவும் சூடானைச் சேர்ந்த மூன்றாமவர் சிறுகுற்றம் புரிந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த மூன்று பேருக்கும் பொது இடத்தில் வைத்து வாளால் தலையைத் துண்டித்துத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

(இ-ஒ)

# தற்காலிக பங்கீட்டு அட்டையின்றி இடம்பெயர்ந்தோர் பலர் அவதி

தென்மராட்சி, மே 4

பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதிகளில் சில பிரதேச செயலர் பிரிவுகளில் தங்கியுள்ள மக்களுக்கு தற்காலிக பங்கீட்டு அட்டை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தந்த பிரதேச செயலகங்களுக்குச் சென்ற போது ஏற்கனவே இடம்பெயர்ந்தோரின் பதிவுகள் கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டதால் தற்காலிக பங்கீட்டு அட்டைக்கானபதிவு தேவையில்லை எனவும் தேவை ஏற்படும் பட்சத்தில் கிராம அலுவலர்கள் மூலம் அறிவிக்கப்படுமெனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

இடம்பெயர்ந்து வலிகாமத்தில் தங்கியுள்ள பொதுமக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு வந்து தற்காலிக பங்கீட்டு அட்டை பதிவு சம்பந்தமாக விசாரித்து வருகின்றனர். (இ-117)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மே 4

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீபர்வதவர்த்தினி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் பூரணை தினம் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவு பெறும்.

(க—31)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 4

கோண்டாவில்- தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு திருஊஞ்சலும் இடம்பெறவுள்ளன. (க—30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 4

பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் பொங்கல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை நடைபெறும்.

நாளை பொங்கலுக்குமுன் நிகழ்வாக வெளிமடை வைபவம் இடம்பெறும்.

(க-173-15-109)

★ ★ ★

சாவகச்சேரி, மே 4

சாவகச்சேரி நகர் ஆவரஞ்சாட்டி ஸ்ரீமுருகமூர்த்தி ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

(க—30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 4

சித்தன் கேணி பெரிய வளவுமஹாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதியும் மறுநாள் வியாழன் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(க-30)

★ ★ ★

சங்கானை வெல்வில் இலுப்பைத் தாழ்வு முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தினங்களை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி வியாழக்கிழமை வரை தினமும் காலை 8 மணி முதல் 10மணிவரை விசேட அபிஷேகப் பூசைகள் நடைபெறும். (க)

## கோட்ட மட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்படுகின்ற கோட்ட மட்டத் தமிழ்த்தினப்போட்டிகள் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகின.

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் யாவும் கடந்த 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளிலும்—

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கான வலய மட்டப் போட்டிகள் 25 ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறவுள்ளன.

(இ-10)

## கலந்துரையாடல்

கொக்குவில், மே 4

திருநெல்வேலிமத்தி தெற்கு J/111 கிராமசேவையாளர் பிரிவில் சமுர்த்தி செயலணிக் குழு அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும்.

18வயதுக்கும்35 வயதுக்கும் இடைப்பட்டோரைக் கொண்டு செயலணிக் குழு அமைப்பது பற்றிய இந்தக் கலந்துரையாடலில் வலயம் I இன் முகாமையாளரும் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-69)

## தேடப்பட்டவர் வீடு திரும்பினார்

யாழ்ப்பாணம், மே 4

கடந்த 29 ஆம் திகதி காணாமற்போன ஒருவர் வீடு திரும்பி விட்டதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நாகநாதன் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த நடேசன் அகிலன் (வயது 13) என்பவரே நேற்று முன்தினம் வீடு திரும்பியவராவார்.

(இ-10-5)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக முதலாவது நடமாடும் சேவை

### ஆனைக்கோட்டையில் இடம்பெறும்

சண்டிலிப்பாய், மே 4

சண்டிலிப்பாய்(வலி. தென்மேற்கு) பிரதேச செயலகத்தின் முதலாவது நடமாடும் சேவை இன்றுவியாழக்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு, சாவற்கட்டு, உயரப்புலம், ஆனைக்கோட்டை ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளின் மக்களுக்காக இந்த நடமாடும் செயலக சேவை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் தேசிய, விசேட அடையாள அட்டை, பொதுசன மாதாந்த உதவிப்பணம், உணவுமுத்திரை, ஓய்வூதியம், காலம் கடந்த பிறப்பு இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரம், விவசாய காப்புறுதி மீளக்குடியமர்வு நஷ்ட ஈடு, கடும்பாதிப்புற்றோர் நிவாரணம் போன்ற பல பிரச்சினைகள் ஆராயப்படும்.

இதனைதவிர பொது மக்களின் பொது தேவைகள் பற்றிய முறைப்பாடுகளும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலரும், உடுவில் பிரதேச செயலருமசன ஆ. மகாலிங்கம் தெரிவித்தார். (இ-135)

## மீண்டும் கைது

யாழ்ப்பாணம், மே 4

ஏழாலை வடக்கைச் சேர்ந்த சிவவிநாயக மூர்த்தி உதய சூரியன் (வயது 24) என்ற இளைஞன் கடந்த முதலாம் திகதி படையினரால் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவர் ஏற்கனவே கடந்த வருடம் படையினரால் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து அண்மையில் பிணையில் இங்கு வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது ·(இ-9)

## ஈஸ்வரம்மா தினம்

மானிப்பாய், மே 4

மானிப்பாய் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு ''அன்னை ஈஸ்வரம்மா தினம்'' கொண்டாடப்படவுள்ளது.

விசேட நிகழ்வுகளாக பஜனை, சொற்பொழிவு மற்றும்''பாலவிகாஷ்''மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(இ-7-90)

## விவசாய சம்மேளனம் உதவி

அண்மையில் இடம்பெற்ற ஷெல்வீச்சுக்களின் போது காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி யோகராசா, கணபதிப் பிள்ளை பொன்னையா, கிருஷ்ணன் தவமணி ஆகியோருக்கு எழுதுமட்டுவாழ் தெற்கு விவசாய சம்மேளனத்தினர் வைத்திய செலவுக்கென தலா இரண்டாயிரம் ரூபா வழங்கியுள்ளனர் என சங்கச் செயலாளர் இ. தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார். (இ-117)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

தென்மராட்சி, மே 4

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கட்டாக் காலியாக அலையும் நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியை சாவகச்சேரி நகரசபை மேற்கொண்டு வருகிறது.

தற்போது நிலவும் வெப்பத்தினால் நாய்களுக்கு விசர் நோய் ஏற்படலாமெனக் கருதி சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தனர். இதனை அடுத்தே நகர்ப் பகுதி, ஆஸ்பத்திரி ஆகிய இடங்களில் அலையும் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## சங்கக் கிளை இடம்மாற்றம்

தென்மராட்சி, மே 4

மிருசுவிலில் இயங்கி வந்த பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகள் மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள வீடொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

## கொக்குவில் கிழக்குப் பகுதியில் திருடர்கள் கைவரிசை

### இரு வீடுகளில் ஒரே இரவில் திருட்டு

கொக்குவில், மே 4

ஒரே இரவில் இரண்டு வீடுகளில் திருடர்களின் கைவரிசை இடம்பெற்றுள்ளது. மூன்றாவது வீட்டில் திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டது. ஒரு வீட்டிலிருந்து இரண்டு மோதிரங்களும் மூன்று மணிக்கூடுகளும் மற்றைய வீட்டிலிருந்து ஆறாயிரம் ரூபா பணமும் மற்றும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியுள்ள நகைகளும் களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் சென்ற வாரம் இரவு கொக்குவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றன.

முதலாவது வீட்டில் திருடிய பொருள்களுடன் திருடன் வெளியேறும்போது அந்த வீட்டிலிருந்து அடையாள அட்டை அடங்கிய பேர்ஸையும் எடுத்துச்சென்றுள்ளான்.

இரண்டாவது வீட்டின் குசினி ஓடுகளைக் கழற்றி உள்ளே இறங்கிய திருடன் அந்த வீட்டினுள்ளிருந்த சகல பொருள்களையும் கிளறி ஆராய்ந்து அங்கிருந்த 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளான்.

முதலாவது வீட்டிலிருந்து எடுத்துச் சென்ற அடையாள அட்டையுடனான பேர்ஸை இரண்டாவது வீட்டில் அவன் விட்டுச் சென்றுள்ளான்.

அதே பகுதியிலமைந்த மற்றொரு வீட்டின் ஓடுகளைக் கழற்றி திருடன் உள்ளிறங்க முற்பட்டவேளை வீட்டவர்கள் கூச்சலிடவே திருடன் தப்பி ஓடிவிட்டான் என்று கூறப்படுகிறது. (இ-69)

## வீடியோப் படக்காட்சி

யாழ்ப்பாணம், மே 4

சென்னை மயிலாப்பூரில் புதிதாகக் கட்டப்பட்ட பகவான்ஸ்ரீராமகிருஷ்ணர்கோயிலின் மகா கும்பாபிஷேகத்தின் வீடியோப் படக்காட்சிநாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காண்பிக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (க)

## கல்விக் கண்காட்சி

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆரம்பக்கல்விக் கண்காட்சி நாளை வெள்ளி மற்றும் சனிக்கிழமையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறும்.

யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆரம்பக்கல்வி மன்றக் காப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான எஸ். செந்தில்மணியின் வழிகாட்டலில் ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவர்களால் ஆண்டு 1,2க்கான புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய இந்தக் கல்விக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-73)

## இருதரப்பினரும் போரை நிறுத்தி பேச்சுக்கு முன்வர வேண்டும்

### ஈ. பி. டி. பி. மேதினக் கூட்டத்தில் உரை

காரைநகர், மே 4

போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் போரை நிறுத்திச் சமாதானப் பேச்சுக்களுக்கு முன்வரவேண்டும்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளரும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான ந. மதனராஜா இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் ஆதரவில் தீவுப்பகுதிதொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய மேதினப் பேரணியின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்,

ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற இந்த மேதினக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய ந. மதனராசா தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நடந்து கொண்டிருக்கும் போரினால் அழிவுகளையே காணக்கூடியதாக உள்ளது. மக்கள் மீளக்குடியமர்ந்து தமது சகஜ வாழ்க்கைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் இத்தவேளையில் — சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கிடைத்துள்ள வேளையில் — இந்தப் போர் வேண்டாத போராகக் கருதப்படுகின்றது. இந்தப் போரை நடத்தும் இரு தரப்பினரும் மக்களின் சுபீட்சத்தை கருதுவோராக இருந்தால் உடனடியாகப் போரை நிறுத்தி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்—என்றார்.

கூட்டத்தில் தொழிற் சங்கங்களின் தலைவர்களும் உரைநிகழ்த்தினர்தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ-73)

# கடந்த நான்கு வருடங்களாக சுகாதாரச் சேவை பின்னடைவு

## யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 4

யாழ். குடாவில் கடந்த நான்கு வருடங்களாக சுகாதாரச் சேவையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பெப்ரவரி—மார்ச் மாதங்களுக்கான நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

கிராமப் புறத்திலுள்ள பல ஆஸ்பத்திரிகளில் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படவில்லை. அத்துடன் மருந்துப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. ஆகவே குடாவின் சுகாதார சேவை உடனடியாக முன்னேற்றப்படவேண்டும். அரசு இதற்கு முதன்மை இடம் வழங்கிச் செயற்பட வேண்டும்.

### 19 ஆயிரம் விதவைகள்

கடந்த கால வன்செயல்களினால் 19 ஆயிரம் பெண்கள் தமது கணவனை இழந்து விதவை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதில் 9 ஆயிரம் பெண்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்கள். இவர்கள் கணவன்மாரை இழந்து வருமானம் எதுவுமின்றி பெரும் கஷ்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

### கடற்றொழிலாளர் நிலை

யாழ் குடாவில் கடற்றொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாகவுள்ளது. தொடர்ந்தும் அவர்கள் கஷ்ட நிலைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

தமது ஜீவனோபாயத்துக்குக்கூட மீன்பிடித் தொழிலை செய்யமுடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடல் பகுதியில் உள்ள தேவையற்ற, நியாயப்படுத்த முடியாத பாதுகாப்புத் தடைகள் காரணமாக மீன் பிடித் தொழிலை முழு அளவில் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இடத்துக்கிடம் அமுல் செய்யப்படும் நேரம் மற்றும் மீன் பிடித் தூரங்களினால் இவர்கள் சுதந்திரமாகத் தமது தொழிலைச் செய்ய முடியாதுள்ளனர்.

### விவசாயம்

ஜனவரி—பெப்ரவரி மாதங்களில் பெய்த கடும் மழையினால் இங்கு செய்கை பண்ணப்பட்ட மிளகாய், வெங்காயம் போன்ற பயிர்கள் அழிந்துள்ளன. இதனால் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

இந்தப் பயிர்களின் அழிவுக்கு நஷ்டஈடு கோரி விவசாய சம்மேளனங்கள் அரசுக்கு விண்ணப்பித்துள்ள போதிலும் நஷ்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை.

### வாழைச்செய்கை

வாழைச் செய்கையினால் வருமானம் பெறமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது, ஒரு கிலோ வாழைப்பழம் 3 ரூபாவும் அதற்குக் குறைவாகவுமே இங்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் வாழை மரத்துக்கு நீர்ப்பாய்ச்சும் செலவினைக்கூடப் பெறமுடியாதுள்ளது.

சந்தைப்படுத்தல் வசதியில்லாத காரணத்தினாலேயே வாழைப்பழச் செய்கையில் விவசாயிகள் இலாபம் பெற முடியாதுள்ளனர். இந்த நிலை தொடருமானால் வாழைப்பழச் செய்கையைக் கைவிடும் நிலை ஏற்படலாம்.

காலம் மாறி கூடுதலாகப் பெய்த மழை காரணமாக மரக்கறிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் என்றுமில்லாதவாறு அதிகரித்த விலையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

### கைதுகள்

சந்தேகத்தினாலும் வேறு சில காரணங்களுக்காகவும் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதனால் இளைஞர்கள் பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வீட்டிலிருந்து பாடசாலை மற்றும் தொழில் தேவைகளுக்காக வெளியே செல்லும் இளைஞர்கள் மீண்டும் வீட்டுக்குத் திரும்பும் வரை அவர்களது பெற்றோர் அச்சத்துடன் வழிபார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

### சூழல் பாதிப்பு

ஜனவரி — பெப்ரவரி மாதங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பாதுகாப்பு அரண்களுக்காக வெட்டப்பட்டுள்ளன.

தென்னை மரங்கள் வெட்டப்படுவதனால் சூழல் மாசடைவதுடன், பாவனைக்குத் தேவையான தேங்காயைப் பெறமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் தென்னைச் செய்கையாளர்களின் சொந்த வருமானத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே தென்னை மரங்கள் வெட்டப்படுவதை அரசு தடை செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

### பயணிகள் சேவைகள் நிறுத்தம்

பலாலிக்கும் கட்டுநாயக்காவுக்கும் இடையில் இருவழி சேவைகளில் ஈடுபட்டு வந்த ஹெலிடூர்ஸ் விமான சேவை மார்ச் 30 ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை காங்கேசன் துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் ஒழுங்கான கப்பல் சேவை இல்லாமையினால் மக்கள் கொழும்பு உட்பட ஏனைய மாவட்டங்களுக்கு தமது அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட செல்ல முடியாதுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கான ஒழுங்கான கப்பல் சேவை அத்தியாவசியமானதும் அவசரமானதும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# படையினரின் குடும்பங்களுக்கு உதவி

கொழும்பு, மே 4

ஆனையிறவு யுத்தத்தில் மரணமடைந்த வடமேல் மாகாணத்தைச்சேர்ந்தபடையினரின் குடும்பங்களுக்கு உதவுவதற்காக வடமேல் மாகாணசபை ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கி உள்ளது.

மாகாண சபையிலுள்ள 30 ஆளும் கட்சி உறுப்பினர்கள் தலா மூவாயிரத்து 300 ரூபா வீதம் வழங்கி இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று வடமேல் மாகாண போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சர் தெரிவித்தார்.

வடமேல் மாகாண முதலமைச்சர் தலைமையிலான இந்த உதவி வழங்கும் குழு ஆனையிறவு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட படையினருக்கு உதவி வழங்கி வருவதாகவும் —

இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

## ஊனமுற்றவர்களுக்கு

# வெளிநாட்டவர்கள் அளிக்கும் ஊக்கம் கூடநம்மவரிடமிருந்து இல்லை

## திறப்புவிழாவில் உரை

யாழ்ப்பாணம், மே 4

அந்நிய நாட்டவர்கள் எமது நாட்டில் உள்ள ஊனமுற்றவர்களுக்கும் அவர்களது முயற்சிகளுக்கும் அளிக்கும் ஊக்கத்தைக்கூட எமது நாட்டவர்கள் அளிப்பதில்லை.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊனமுற்றவர்களின் சொந்த முயற்சியில் தயாரிக்கப்பட்ட பல்வேறு பொருள்களைச் சந்தைப்படுத்தும் நிலையத் திறப்புவிழாவில் உரையாற்றிய சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். சிவராஜா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் வவுனியா மாவட்ட முன்னாள் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் பஷீர் ரனி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சந்தைப்படுத்தல் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

வைத்திய கலாநிதி எஸ். சிவராஜா தனது உரையில் மேலும் கூறியதாவது:

ஊனமுற்றவர்கள் சமூகத்தின் எந்தத் தரப்பினரிலும் தங்கி வாழ்பவர்களாக இருக்கக்கூடாது.

அவர்களின் சொந்த முயற்சியில் உருவாக்கப்படும் கைப்பணிப் பொருள்கள், தைத்த ஆடைகள், பூச்செண்டுகள், வாழ்த்து அட்டைகள் போன்றவற்றைச் சந்தைப்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கம். இதன் மூலம் உடலால் ஊனமுற்றுள்ள அவர்களின் உள்ளங்களை நாம் மேம்படுத்த முடியும்.

வெளிநாட்டவர்கள் அவர்களது நாட்டில் உள்ள ஊனமுற்றவர்களுக்குப் பல்வேறு துறைகளிலும் அளித்து வரும் ஊக்கம் மிகப் பெரியது. அவர்கள் நம் நாட்டுக்கு விஜயம் செய்யும்போது அதே அளவு ஊக்கத்தை நம் நாட்டு ஊனமுற்றவர்களுக்கும் வழங்குகிறார்கள்.

அதேவேளை — நம் நாட்டவர்கள் எம்மில் ஒருவராக வாழும் ஊனமுற்றவர்களுக்கு ஊக்கமளிக்கிறார்களா என்பது கேள்விக்குறியே.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-6-8)

# செய்திக் கொத்து

### சிறுவர் நூல் நிலையம்

கொக்குவில், மே 4

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆதரவில் சிறுவர் நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் நிலையத்திற்குத் தேவையான நூல்களை வழங்குவதற்கு தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள் முன்வந்துள்ளனர். (க-69)

### வீதித் திருத்த வேலைகள் தாமதம்

நெடுந்தீவு, மே 4

அனலைதீவு பிரதான வீதியின் திருத்த வேலைகள் தாமதிக்கப்பட்டு வருவதாகவும் புனரமைப்புப் பணிகளுக்கென வீதியோரத்தில் சல்லிக் கற்கள் குவிக்கப்பட்டு நீண்ட நாள்களாகியும் வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-111)

### மதகு அமைப்பு

நவாலி, மே 4

வடலியடைப்பு ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையால் வெள்ளநீர் வழிந்தோடுவதற்கான வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு பிரதான சாலையூடாக வயல்களுக்கு வெள்ளம் ஊடறுத்துச் செல்லுமுகமாக மானிப்பாய் பிரதேச சபையினால் மதகு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-100)

### மலசலகூடம் அமைக்க உதவி

நெடுந்தீவு, மே 4

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் மலசலகூடம் அமைப்பதற்கான உதவிகளை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளதாக அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தெரிவித்தார். (க-111)

### திருத்தப்படாத மயானம்

வலி. தென்மேற்கு, மே 4

நவாலி ஆரியம்பிட்டியிலுள்ள மயானம் கடந்த 5 வருடங்களாகத்திருத்தப்படாத நிலையில் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-185)

### நடமாடும் வைத்திய சேவை

திருநெல்வேலி, மே 4

யாழ். மலேரியாத் தடுப்பு இயக்கப் பிரிவின் நடமாடும் வைத்தியசேவை விரைவில் வட்டுக்கோட்டை, அராலி ஆகிய பகுதிகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பகுதிகளில் சிலருக்கு மலேரியா நோய் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து இந்தச் சேவை நடத்தப்படவுள்ளது.

இதேவேளை —

வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களிலிருந்து வடமராட்சி பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்து மக்கள் வந்ததை அடுத்து அப்பிரதேசத்திலும் நடமாடும் வைத்திய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (க-135)

### மாடிக் கட்டட வேலைகள் ஆரம்பம்

நவாலி, மே 4

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின்இரு மாடிக்கட்டடத்துக்கான நிர்மாண வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனத்தின் உதவியுடன் 110 அடி உயரமும் 25 அடி அகலமும்கொண்ட மேல்மாடிக் கட்டடத்திற்கான வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (ஐ-100)

### வீதி புனரமைப்பு

திருநெல்வேலி மே 4

நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் குண்டும் குழியுமாக இருந்து வந்த கந்தர்மடம் பழம் வீதி (பழம் றோட்) கடந்த வாரம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)

### சான்றிதழ்களைப் பெறுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, மே 4

பனை இளைஞர் சேவைகள் பிராந்திய சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சியில் கலந்து கொண்டு இதுவரை சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளாத இளைஞர் யுவதிகள், மீசாலை புத்தூர்ச் சந்தியில் உள்ள பனைப்பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் ஆ. கேதீஸ்வரனிடம் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு சம்மேளனத் தலைவர் செ. நிமலரூபன் தெரிவித்தார். (க-117)

### நிவாரணமாக ஐந்நூறு ரூபா

வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்து — யுத்த அனர்த்தங்களின் போது படுகாயம் அடைந்த 27 பேருக்கு வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தலா ஐந்நூறு ரூபா ரொக்கப் பணத்தை நிவாரணமாக வழங்கியது.

சங்கத் தலைவர் வி. வேலாயுதபிள்ளை பொது முகாமையாளர் பொ. ஸ்ரீ இராமச்சந்திரன், கிராம சேவையாளர் வி. நடராசா ஆகியோர் காயமடைந்தோர் தங்கியுள்ள இடங்களுக்கு நேரடியாகச் சென்று இப் பணத்தை வழங்கினார்கள். (க-173)

### கசிப்பு விற்பனை அதிகரிப்பு

அரியாலைப் பகுதியில் கசிப்பு விற்பனை நாளுக்கு நாள் அதிகரிப்பதுடன் சட்ட விரோதகள் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது அரியாலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கசிப்பு விற்கும் இடங்களுக்குச் சென்று கசிப்பு விற்பனையில் ஈடுபட வேண்டாமெனக் கூறி வருகின்றனர்.

இதே வேளை —

பொதுமக்களும் கசிப்பு விற்பனையைத் தடுக்கும்படி அரச உத்தியோகத்தர்களைக் கேட்டுள்ளனர்.

அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற நடமாடும் செயலக சேவையின் போது இதனை ஒழிக்கும்படி கோரிக்கை ஜர்கையளிக்கப்பட்டிருந்ததையும் குறிப்பிடத்தக்கது. (க-86-17)

# நியாயமான விலையில் பொருள்களை விற்குமாறு வணிகர்கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 4

இன்றுள்ள சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் நேர்மையுடனும் நீதியுடனும் நிதான விலையில் பொருள்களை விற்பனை செய்ய சகல வர்த்தகர்களும் முன்வர வேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

தற்போதைய யுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சில வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கி செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கூட்டி விற்பதாக அறியப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து தொழில் வாய்ப்பின்றி மக்கள் துன்பத்தின் மத்தியில் வாழ்கின்றனர்.

ஆகவே துன்பப்படும் ஏழை மக்களுக்குப் பெரும் சுமையை மேலும் ஏற்றாமல் மனிதாபிமான அடிப்படையிலும் நேர்மையுடனும் நீதியுடனும் நிதான விலையில் பொருள்களை விற்கும்படி சகல வர்த்தகப் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் தற்போது பொருள்கள் கையிருப்பில் இருப்பதனால் பொது மக்கள் தேவைக்கு அதிகமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்துப் பொருள்களைப் பதுக்குவதற்கும் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் கொள்ளை இலாபம் அடிப்பதற்கும் உடந்தையாக இருக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகின்றோம் — என்றுள்ளது.

(இ-3)

## நடமாடும் மருத்துவச் சேவை வன்னியில் செயலிழக்கும் நிலை

வவுனியா, மே 4

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் நடத்தப்பட்டு வரும் நடமாடும் மருத்துவ சேவை செயலிழக்கும் நிலையில் உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள பின்தங்கிய மற்றும் உள்ளூர்க் கிராமங்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தனது நடமாடும் சேவையை நடத்தி வந்தது.

இந்தச் சேவைக்கெனக் கொண்டுவர இருந்த மருந்துப் பொருள்களை அரசு குறைத்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-ச-9)

## நோயாளர் கப்பல் சேவை

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இம்மாதத்தில் 5 தடவைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 5ஆம், 11 ஆம், 17ஆம், 24ஆம், 27ஆம் திகதிகளில் இச் சேவை இடம்பெறவுள்ளது. (க - 3)

## பொருள்களை வாங்குவதில் மக்கள் தீவிரம்

யாழ். நகரப்பகுதி மக்கள் அரிசி, மா, சீனி, சவர்க்காரம், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

'குடாநாட்டின் தற்போதைய நிலைமையில் அத்தியாவசியப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுவதே இதற்குக் காரணம் ஆகும்.

அதே சமயம் முக்கிய பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை எனவும் பொதுமக்கள் முண்டியடித்துப் பொருள்களை வாங்கிச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என்றும் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-111)


## அறிவித்தல்

யாழ்/பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் நெறியின் இறுதி வருட (A, B) பிரிவு அனைத்து மாணவர்களையும் மன்றத்தின் செயற்குழு அங்கத்தவர்களையும் 05. 05. 2000 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு மன்றப் புகைப்படம் எடுப்பதற்காக பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

தலைவர்,

முகாமைத்துவ மாணவர் மன்றம்,

(75941) யாழ். பல்கலைக்கழகம்.

1971 - 1976 ஆம் ஆண்டு பட்டதாரி பயிற்சித்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற

## அரச அலுவலர் சங்கம் அவசர கலந்துரையாடல்

### 07 - 05 - 2000

எமது சங்கத்தால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குத் தொடர்பில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது சம்பந்தமான அவசர கலந்துரையாடலில் தொடர்புபட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்:- கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்
தட்டாதெருச் சந்தி, K. K. S. வீதி.

காலம்:- 07 - 05 - 2000 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 - 30 மணி (S. L. T)

க. தியாகராசா
தலைவர்

பிரதேச செயலகம்,
கரவெட்டி.
02 - 05 - 2000 (சி-12025)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர் குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை

மலர்வு 31—08—1935 உதிர்வு 04—05—1996

அப்பாவே! அப்பாவே! பாசமிகு அப்பாவே!
அல்லும் பகலும் அயராது உழைத்தவரே!
ஆண்டு நான்கு சென்றாலும் ஆறாதப்பா எம் துயரம்.
அமலனடி சேர்ந்திடவே அனுதினமும் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

இராமன் வளவு,
அச்சுவேலி. (75962)


## சுழிபுரத்தில் தேடுதல்

நேற்று முன்தினம் சுழிபுரம் பகுதியில் இராணுவத்தினர் வீடு, வீடாகச் சென்று தேடுதல் நடத்தினர்.

இந்தத் தேடுதலின் போது பெரும் எண்ணிக்கையான படையினருடன் கடற்படையினரும் இணைந்து கொண்டனர். வீதியால் சென்ற வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டன.

சுழிபுரம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் மூடப்பட்ட பின்னர் இரண்டாவது தடவையாக இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது. முதல் சம்பவத்தில் சிலர் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட் வருவதாக தெரிய வருகிறது இதே வேளை—

நேற்றைய தினம் நடைபெற்ற தேடுதலின் விவரம் தெரிய வரவில்லை. (இ-28)

## பஸ்சேவை

தொல்புரம், டச்சுவீதியால் விரைவில் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவை நடத்தப்படவுள்ளது.

மூளாயில் இருந்து தொல்புரம் டச்சு வீதியால் யாழ்ப்பாணம் செல்லக் கூடிய வகையில் இந்தச்சேவை நடைபெறவுள்ளது.

இந்தச் சேவையினால் தொல்புரம், வட்டு கிழக்கு, சித்தன்கேணி, மூளாய்ப் பகுதி மக்கள் அதிக நன்மை அடைய உள்ளனர். (இ-28)

## கோள்கள் ஒரே கோட்டில்...

இம்மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை ஐந்து கோள்கள் ஒரே கோட்டில் வரவுள்ளதாக 01—05—2000 திகதிய உதயனில் வெளியான செய்தி குறித்து வானியல் ஆர்வலர்கள் இருவர் எழுதிய கடிதங்களை இங்கே தருகிறோம்.

உதயனில் வெளியான செய்தி இந்திய வானொலிச் சேவை ஒன்றில் வெளியான தகவலை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டதாகும்.

யாழ்ப்பாணம், அத்தியடி குறுக்கு வீதியைச் சேர்ந்த டாக்டர் சி. முகுந்தன் பின்வருமாறு எழுதுகிறார்:

இம்மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வானில் சந்திரன், செவ்வாய், புதன். வியாழன், வெள்ளி, சனி என்பன ஒரே இராசியில் அமைகின்றன.

ஆனால் அதே இராசியில் சூரியனும் இருப்பதால் வெள்ளி, செவ்வாய் தவிர்ந்த ஏனைய கிரகங்கள் சூரியனின் பிரபைக்குள் Glare of Sun முற்றாக மறைவதால் (சமாகமம் – Superior Conjunction) இவற்றை வெற்றுக் கண்களாலோ அல்லது சாதாரண தொலை நோக்குக் கருவியாலோ பார்க்க முடியாது.

இது தொடர்பாக உதயன் 01—05—2000 இதழில் வெளியான ''விண்ணில் ஐந்து கோள்கள் ஒரே வரிசையில்'' என்பதும் வெற்றுக் கண்களால் காண முடியுமென்பதும் சரியானவை அல்ல.

★ ★ ★

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த இலங்கை சோதிட ஆய்வுமன்றச் செயலாளர் சி. இரத்தினவடிவேல் எழுதியுள்ளதாவது:-

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்கள் ஒரே நேர்கோட்டில் வருவதாகவும் அவற்றை வெறும் கண்களாலேயே பூமியிலிருந்து காணமுடியும் என்பதும் தவறானதாகும்.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிரகங்கள் சூரியனுடன் சமநிலை [Conjunction] அடையவிருப்பதால் ஏப்ரல் 24 தொடக்கம் சனியும், ஏப்ரல் 26 தொடக்கம் வியாழனும், ஏப்ரல் 28 தொடக்கம் புதனும் அஸ்தமனம் அடைந்துள்ளமையால் (Heliacal Setting of Planets) இவற்றை வெறும் கண்களாலோ அல்லது சாதாரண தொலைநோக்கி மூலமோ காணமுடியாது. செவ்வாய் மே 5 தொடக்கமும், வெள்ளி மே 13 தொடக்கமும் அஸ்தமனம் அடையும் இக்காலம் தொடக்கம் இவற்றையும் காண முடியாது.

மேற்குறிப்பிட்ட [மே 3 முதல் 5 வரை] காலப்பகுதியில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிரகங்கள் விஷுரேகைக்கு வடக்கே (Celestial Equator) 10 பாகைக்கும் 20 பாகைக்கும் இடையில் உச்சம் கொடுப்பதையும், செவ்வாய் தவிர்ந்த ஏனையவைகள் நிரையானமுறைப்படி மேடத்தில் உறைந்திருப்பதையும் கவனத்திற் கொள்ளலாம்.

புதனும் வியாழனும் மே 21 தொடக்கமும், சனி மே28 தொடக்கமும், வெள்ளி ஜூலை 11 தொடக்கமும், செவ்வாய் ஓகஸ்ட் 23 தொடக்கமும் அஸ்தமனம் நீங்கி உதயமாவதால் (Heliacal Rising of Planets) அது முதல் வெறும் கண்களாலேயே காணமுடியும்.

மேற்குறிப்பிட்ட கூற்றை 1850 தொடக்கம் வெளிவரும் ஜேர்மனிய கிரகநிலை நாட்காட்டியான DIE DEUTSCHE EPHEMERIDE என்ற நூலும் திருக்கணித பஞ்சாங்கமும் ஊர்ஜிதப்படுத்துகின்றன.

## சிறுவர்கள் கிணற்றுக்கு பலியாகும் சம்பவங்கள் அதிகரிப்பு

தென்மராட்சி. மே 4

தென்மராட்சிப் பகுதியில் சிறுவர்கள் கிணற்றில் வீழ்ந்து மரணமடையும் அல்லது காயம் அடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன

கடந்த மாதம் நான்கு சிறுவர்கள் உட்பட ஐவர் கிணற்றில் வீழ்ந்த சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் இருவர் பலியாகியுள்ளனர்.

சிறுவர்களைக் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு பெற்றோர் அனுமதிப்பதே இந்த அனர்த்தங்களுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களையும் வலிப்பு நோய் உள்ளவர்களையும் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கு அனுமதிக்கக் கூடாதென சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யமுனானந்தா அறிவித்துள்ளார்.

(இ-117)

## தொழில்நுட்பக் கல்வி வலயம் மூடப்படுவதற்கு எதிர்ப்பு

கொழும்பு, மே 4

வடக்கு - கிழக்கு மாகாண தொழில் நுட்பக்கல்வி வலயத்தினை மூடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு கல்விமான்கள் தமது பலத்த கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகள் யாவும் கடந்த காலங்களில் கண்டி, அனுராதபுரம் மற்றும் பண்டாரவளை ஆகிய இடங்களில் உள்ள தொழில் நுட்பக் கல்வி வலயங்களின் நிர்வாகத்தின் கீழேயே இயங்கி வந்தன.

இந்த நடைமுறையினால் உள்ள சிரமங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட நிலையில் திருகோணமலை, மட்டக்களப்பு, சம்மாந்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளை நிர்வகிக்கவும் இவற்றுக்கான வசதிகளையும் வளங்களையும் வழங்கவும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாண தொழில் நுட்பக்கல்வி வலயம் உருவாக்கப்பட்டது.

இந்தக் கல்வி வலயம் திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரியின் ஒரு பகுதியில் செயலாற்றும் வகையில் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஆனால் ஏனைய தொழில்நுட்ப வலயங்களைப் போன்று இந்த வலயம் இயங்குவதற்கான வசதிகள், வளங்கள் என்பன வழங்கப்படாத நிலையில் இதன் பணிப்பாளர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இந்த நிலையிலேயே வடக்கு — கிழக்கின் பாதுகாப்பு நிலையினைக் காரணம் கூறி பலத்த சிரமங்களின் மத்தியில் பெறப்பட்ட இந்த வலயத்தை மூடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. (இ-10)

# உதயன்

## நட்டம் என்ன?

இலங்கையில் இன்று தோன்றியுள்ள நெருக்கடியான — இக்கட்டான — நிலையை நீக்குவதற்கு இந்தியாவின் உதவியை பௌத்த பீடங்களின் தலைவர்கள் கோரியிருந்தமை குறித்து நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இந்தியாவின் உதவியை ஜனாதிபதி சந்திரிகாவும் கோரியுள்ளார் என்று நேற்றுக் கிடைத்த ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன. இத்தகைய உதவிகளைக் கோருவதற்கு முன்னர், அரச தரப்பு போரை நிறுத்துவதற்கான முன் முயற்சி எதனையும் மேற்கொள்ளாமல் வேண்டாத அறிக்கைகளை வெளியிட்டுவந்தது. போர் பயங்கரமான கட்டத்தில் உள்ளதாகக் கூறுவதனால் மட்டும் அந்த நிலையைப் போக்கி விடமுடியாது. போரை நிறுத்துவதன் மூலம் மட்டுமே அந்த நிலையைப் போக்கலாம் என்பதனை அரச உயர் பீடத்தில் உள்ளவர்கள் இன்னும் புரிந்து கொள்ளாமல் செயற்படுவது மிகவும் கவலைக்கு உரியதாகும்.

இனப் பிரச்சினைக்கான தீர்வை சமாதான வழியிலேயே காண்பது என்று உண்மையாகவே, திர்க்கமாகவே முடிவு செய்திருந்தால், போரை நிறுத்தி, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டிருக்கும். ஆனால் அரசு அவ்வாறு செய்வதற்குப் பின்னடித்து வருகிறது; தயக்கம் காட்டுகிறது.

அரசாங்கம் கூறும் பயங்கரமான கட்டம், விடுதலைப் புலிகள் விரைவில் யாழ்ப்பாணத்தையும் அரச படைகளிடம் இருந்து கைப்பற்றிவிடுவர் என்பதனையே குறிக்கிறது. யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் கேட்பது போல அவர்களிடம் தாரை வார்த்துவிட முடியாது என்று கூறி விட்டு, போரை நிறுத்தினால் தமக்கு கௌரவக் குறைவாகிவிடும் என்று ஜனாதிபதி நினைக்கக் கூடும். ஆனால் தமது படையினரைக் காப்பாற்ற உதவுமாறு இந்தியாவிடம் கேட்பது அதனை விடவும் கௌரவக் குறைவானதாகவும் பலவீனத்தை ஒப்புக் கொள்வதாகவும் அமையாதா?

ஏற்கனவே நாம் இப்பத்தியில் குறிப்பிட்டது போல, அரச உயர் தலைவர்களின் போரைத் தலைமேற் சூடும் போக்கையும் மக்கள் நலன்களைப் புறக்கணிக்கும் போக்கையும் திருத்துவது தென் இலங்கை மக்களிடமே உண்டு; அவர்களின் பொறுப்பே.

அந்தப்பொறுப்பு போர்க்களத்தில் நிற்கும் படையினரின் பெற்றோரிடமும் இராணுவ நடவடிக்கைகளில் ஊனமடைந்த படையினரிடமும் துளிர்த்திருப்பது பாராட்டத் தக்கதாகும். போரினால் ஏற்பட்ட இழப்புக்களின் அனுபவத்தினாலும், போரின் அவலம் தந்த அனுபவத்தினாலும் அந்த இரண்டு தரப்பினர்களும் யதார்த்தத்தை உணர்ந்திருக்கிறார்கள். ஏனைய மக்களும் தமை இ உணர்வர் என நம்பக்கூடிய சூழ்நிலை இப்போதையது.

தென்னிலங்கை அரசியலில் அளவுக்கதிகமான செல்வாக்குச் செலுத்தும் பௌத்த குருமார்களும் தங்கள்சொந்த நலன்களை முன்னிறுத்திச் செயற்படும் பேரினவாதிகளும் இந்த யதார்த்தத்தை உணர்வார்களா என்பது சந்தேகமே.

அவர்களைப் பொருட்படுத்தாமல், தென்னிலங்கை மக்களின் மனவிருப்பத்தை உணர்ந்து அரசு செயற்படுவதே இந்த இக்கட்டான நிலையில் விவேகமானதாகும். போரின் விளைவாகப் பயங்கரமான நிலை உருவாகி இருப்பதாகக் கூறும் அரசுக்கு போரை நிறுத்துவதானால், அதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்வதால், என்ன நட்டம் வந்துவிடப் போகிறது?

# குடாநாட்டின் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிக்கு இவ்வருடம் 72 கோடி ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 4

குடாநாட்டில் இந்த வருடம் பல்வேறு புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள 72 கோடியே 60 லட்சம் ரூபாவை வடமாகாண மீள்குடியமர்வுப் புனர்வாழ்வு அதிகாரசபை ஒதுக்கியுள்ளது.

பாடசாலைகள் புனரமைத்தல், வீதிகளைத் திருத்தல் உட்பட மீள்குடியமர்வுப் பணிகளுக்காக வகுக்கப்பட்ட திட்டங்களுக்கே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

இந்தச் சபையின் தலைவராக மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க பதவியேற்ற பின்னர் அவரின் சிபார்சுடன் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காலதாமதமாக நிதி வந்து சேர்ந்த போதும் வருட முடிவுக்குள் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கையை எடுக்கவிருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும் பார்க்க இம்முறையே கூடுதலான நிதி கிடைத்துள்ளதாகக் கூறப்பட்டது.

(இ-3)

## வன்னியிலிருந்து வந்தவர் இயக்கச்சியில் குண்டுவீச்சில் பலி!

தென்மராட்சி, மே 4

வன்னியிலிருந்து இயக்கச்சியில் உள்ள தனது வீட்டைப் பார்க்க வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் இப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிபிர் விமானக் குண்டு வீச்சில் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு இயக்கச்சிப் பகுதியிலிருந்து வெளியேறி வன்னிப் பகுதியில் தங்கியிருந்த இவர் ஆனையிறவுப் படைத்தளம் கைப்பற்றப்பட்டதையடுத்து தனது வீட்டைப் பார்க்க வந்த வேளையில் குண்டு வீச்சுக்குப் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## ஆணைக்குழுவின் தலையீட்டால் அ. அட்டை திரும்பவும் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே, 4

பொலிஸாரினால் பறித்து வைக்கப்பட்டிருந்த குடும்பப் பெண் ஒருவரின்விசேட அடையாள அட்டை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியின் தலையீட்டினால் பெண்ணிடம் திரும்பவும் ஒப்படைக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு முன் திருநெல்வேலி தாழையடிப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த கோப்பாய் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அப் பெண்ணைத் தாக்கியதுடன் அவரிடமிருந்த விசேட அடையாள அட்டையையும் பறித்துச் சென்றார் என்று கூறப்பட்டது.

பல தடவைகள் அடையாள அட்டையைப் பெறுவதற்காகக் குறிப்பிட்ட பொலீஸ் நிலையத்திற்கு அலைந்து திரிந்த குடும்பப் பெண் அடையாள அட்டை கிடைக்காமையினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

இந்தப் பெண்ணின் முறைப்பாட்டினைத் தொடர்ந்து மேற்படி பெண் சகிதம் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா இது தொடர்பாக பொலீஸ் பொறுப்பதிகாரியுடன் பேச்சு நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட பெண்ணிடம் அவரது அடையாள அட்டை வழங்கப்பட்டது.

(இ-5)

# பண்ணிசையை அழியவிடாது காப்பது நிறைவான வாழ்க்கையைத் தரும்

## பரிசளிப்பு வைபவத்தில் ஆணையாளர் உரை

நல்லூர், மே 4

பண்ணிசை என்னும் சிறந்த இசையைக் கால ஓட்டத்தில் அழிந்துவிடாத வகையில் எமது பிள்ளைகள் பேண முன்வந்துள்ளமை அவர்கள் மத்தியில் நல்ல சூழலை உருவாக்க உதவும். அத்துடன் நிறைவான வாழ்க்கையை வாழவும் அவர்களுக்கு உதவும்.

இவ்வாறு யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ். மாநகர சபை ஆணையாளர் வெ. பொ. பாலசிங்கம் கூறினார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆணையாளர் மேலும் கூறியதாவது:

எதிர்காலத்தில் குடும்பத் தலைவர்களாக — வழிகாட்டிகளாக — வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் இதுபோன்ற போட்டிகள் மாணவர்களுக்குப் பலமாக அமைகின்றன. இன்று பெற்றோர்கள்—பிள்ளைகள் இணைந்து பாடும் பழக்கத்தை அனேகமான குடும்பங்களில் காண்கிறேன். இது ஒரு மெச்சத்தகுந்த விடயம். அமைதியான தன்மைகளைப் பெறக் கூடியதாக எமது சமய பாரம்பரியங்களை எல்லோரும் பேண வேண்டும்.

இந்த நல்ல முயற்சிக்கு முன்னின்று உழைக்கும் மாநகர சுகாதாரப்பகுதியினர், கல்வித் திணைக்களம் சார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் துறை சார் பெரியோர்கள் அனைவரும் நன்றிக்கு உரியவர்கள் — என்றார்.

மாநகர சுகாதார வைத்திய அதிகாரியும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் பேசும் போது கூறியதாவது.

சோதனை மிக்க காலத்தில் சமயங்கள் போதிக்கும் தத்துவங்கள், பாடல்கள் அமைதியான மன நிலையை உருவாக்க உதவும். இன்று அமைதிதரக் கூடிய மனோ நிலை தேவை. ஆளுமை, தன்னம்பிக்கை, தலைமைத்துவம் நிறைந்த பிள்ளைகளாக மாணவர்கள் விளங்க அவர்களின் மனோ நிலையே காரணம். அனேக பிள்ளைகளிடத்தில் இதனைக் காண முடிகிறது.

எமது பிள்ளைகளின் எதிர்காலம் நம்பிக்கை மிக்கதாக அமையக்கூடியவகையில் சமய அறிவு வளர்ச்சியில் அவர்கள் மேம்பட்டவர்களாக இருப்பது அவசியம்.

எனவேதான் மாநகரசபை உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி ஏனையோரும் எமக்கு இயன்றவரை ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும் என விரும்புகிறேன் — என்றார்.

முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணபதிப்பிள்ளை பண்ணிசைப் போட்டிகள் குறித்த தமது விமர்சன உரையில். பண்ணிசையில் பக்தி, வித்தை என இரண்டும் உண்டு. பக்திக்காகப் பாட வேண்டும். போட்டிக்காகப் பயன்படுத்துவது வித்தை. இன்று ஆன்மீகம், பண்பாடு என்பன வளர்கின்றன. நல்ல சமுதாயம் உருவாகப் பண்ணிசை உதவுகிறது — என்றார்.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்களையும் சான்றிதழ்களையும் ஆணையாளர் பாலசிங்கம், வைத்தியகலாநிதி தெய்வேந்திரன், திருமதி தெய்வேந்திரன், முன்னாள் கல்விப்பணிப்பாளர் கணபதிப்பிள்ளை ஆகியோர் வழங்கினார்கள்.

சோமசுந்தரம் நன்றியுரை வழங்கினார். பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பண்ணிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(இ-103)



## சாயி சிந்தனை

மனித வாழ்க்கை சிறப்பானது. புனிதத் தன்மை வாய்ந்தது. இதை இந்த வாழ்க்கையில் இனி எப்போது உணர முடியும்? மனதில் தோன்றும் எண்ணங்கள் புனிதமானவையாக இருத்தல் வேண்டும். உள்ளத்தில் பற்பல கோரிக்கைகளைக் குறித்த பேராசை எண்ணங்கள் நிறைந்திருந்தால் எப்படிக் கடவுளை வழிபட முடியும்? எப்படி நற்பயனை எதிர் பார்க்க முடியும்.

ஒன்றுமில்லாத பாத்திரத்தில் ஏதாவது நிரப்ப முடியும். ஏற்கனவே நிரம்பியிருந்தால் அதில் வேறு எதனை வைக்க முடியும்? உள்ளத்தில் ஆசைகள் நிறைந்திருந்தால் அதில் இறைவனை நினைக்க இடமேது? ஆகவே முதலில் அனாவசியமான எண்ணங்களை மனதில் இருந்து அகற்றிவிட வேண்டும். அப்போதுதான் அதில் நல்லெண்ணங்கள் தோன்ற வாய்ப்பிருக்கும்.

[ஆதாரம்:- சனாதன சாரதி]

## நாளை

சித்திரை 23

வெள்ளிக்கிழமை

திதி: பிரதமை

முற்பகல் 8.36 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை

முன்இரவு 8.21 வரை.

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 5.56 7.26

ராகுகாலம்: 10 26 11.56

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், மே 4

கச்சாய்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் சிலர் சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகளை அந்த ஆலய பங்குமக்கள் வழங்கி வருகின்றனர்.

(இ-15)

## சத்திர சிகிச்சைக் கருவிகள்

தென்மராட்சி, மே 4

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் பல் வைத்திய சிகிச்சைப் பிரிவுக்கு நவீன சத்திர சிகிச்சை கருவிகள் வந்துள்ளன. இவை யாழ். மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## வாகனங்கள் சோதனை

புன்னாலைக்கட்டுவன், மே 4

ஏழாலையில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து வாகனங்களை மறித்துப் படையினர் சோதனையிடும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன

சோதனைச் சாவடிகளிலும் பிரதான சந்திகளிலும் படையினர் வாகனங்களை மறித்து சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

(இ-133)

## மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் பொதுமக்களுக்கு மண்எண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஆளுக்கு 5லீட்டர் மண் எண்ணெய் வழங்கப்பட்டது.

(இ-15)

## உதய வாக்கு

தூய்மையுடையவனே கடவுளை மிகவும் நெருங்குகிறான்.

- விவேகானந்தர்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இசை வகுப்புகள்

ஓர்கன், கிற்றார், மெலோடிக்கா, மௌத் ஓர்கன், றெக்கோடர், வீணை, வயலின், புல்லாங்குழல், சங்கீதம். ஆரம்பம்: 05-05-2000 நேரம் 12.30 க்குப்பின். நந்தினி ரங்கன் 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ். நகர். (75965)

## தவறிவிட்டது

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னையா குணரத்தினம் என்பவரது தே அ.அ. இல. (543304239V) வி.அ.அ. இல. (090409218) 27-04-2000 அன்று சுபாஷ் பேக்கரிக்கும் சுதுமலை அம்மன் கோயிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ. சந்திரா சுதுமலை கிழக்கு, அரசடி லேன், மானிப்பாயில் ஒப்படைக்கவும். (75953)

சிவசுப்பிரமணியக்குருக்கள் கமல்ராஜ் என்பவருடைய அ. அ. (இல. 752663963V), விசேட அடையாள அட்டை (இல. 0902033420) என்பன வீரகாளி அம்மன் கோயிலுக்கும் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வீரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் அல்லது முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (75939)

சுப்பிரமணியம் சற்குணராசா என்பவரது விசேட அ. அட்டை (இல. 0902027495) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 296/4, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (75938)

சண்டிலிப்பாய் கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை செல்வநாயகம் என்பவரது விசேட அ. அட்டை, தேசிய அ. அட்டைக்குப் பதிவு செய்த அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அடையாள அட்டையில் உள்ள முகவரியிலோ அல்லது கவிதா பான்சி ஹவுஸ், பெரியகடை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ ஒப்படைத்துதவவும். (75960)

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கிருஷ்ணகுமார் தர்சினி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (807441302V), விசேட அடையாள அட்டை என்பன கடந்த 30-04-2000 அன்று திருநெல்வேலி கின்றியூசன் சென்ரருக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (சி/12029)

## ஆடுகள் விற்பனை

4½ மாத சினையுடைய சுத்தமான ஜமுனாபாரி கன்னி மறி ஆடு விற்பனைக்குண்டு. வேறு நல்ல இன ஆடுகள் குட்டிகளுடனும் உண்டு. தொடர்பு: தவபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75952)

# விவேகானந்தரின் உருவப் படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம், மே 4

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சுவாமி விவேகானந்தரின் உருவப் படம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 45 மணிக்கு வித்தியாலய அதிபர் சி சிற்றம்பலம் தலைமையில் திரை நீக்கம் செய்யப்படும். (க)

# நயினை உற்சவத்தை முன்னிட்டு படகுகளைத் திருத்த நடவடிக்கை

நெடுந்தீவு, மே 4

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் நிகழ இருப்பதால் தமது படகுகளைத் திருத்துவதில் படகுச் சொந்தக்காரர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

நெடுந்தீவு ப. நோ. கூ சங்கப்படகான உதயதாரகையின் திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும் இப்படகு இன்னும் ஒருவாரத்தில் மீண்டும் சேவைக்கு வரலாம் எனவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-111)


சங்கானை

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வெற்றுச்சாக்கு கேள்வி கோரல் கால நீடிப்பு

26-04-2000 திகதிய உதயன் பத்திரிகையில் எமது சங்கத்தால் 30-04-2000 என நிர்ணயிக்கப்பட்ட வெற்றுப் பொருள் கேள்விக்கான முடிவு திகதி 10-05-2000 ஆம் திகதி பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்

04—05—2000 (சி/ 12031)



## யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வலைப்பந்தாட்ட அணிகளை வாழ்த்துகின்றோம்

மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில்

15 வயதுப் பிரிவ் 1 ஆம் இடமும்

17 வயதுப் பிரிவு 1 ஆம் இடமும்

பெற்று எமதுபாடசாலைக்குப்புகழ்சேர்த்த வீராங்கனைகளையும், பயிற்றுநர்களான செல்வி த.அஜிந்தா, செல்வி சி. சுகதர்சினி ஆகியோரையும் பொறுப்பாசிரியர்களையும், அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

15 வயதுப் பிரிவினர் 3 வருடங்கள் தொடர்ந்து மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா / சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

(75979)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிவனொளிபாதம்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வற்றாப்பளை முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவனொளிபாதம் அவர்கள் (02.05.2000) செவ்வாய்க்கிழமை அன்று வற்றாப்பளையில் காலமாகி விட்டார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக்கணவரும் மனோரஞ்சிதம், ரஞ்சிதமலர், சிவமலர், இராசமலர் (சுவிஸ்), சிவபாதசுந்தரம் (ஜேர்மனி), சிவலோகநாதன் (ஆசிரியர் — பிரான்பற்று கலைமகள் வித்தி) சிவதர்ஷன் ஆகியோரின் அன்புத்தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா, இராசநாயகம், திருநாவுக்கரசர் (சுவிஸ்), சாந்தினி (ஆசிரியை — பண்ணாகம் மெய்கண்டான் ம. வி) ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், Dr. தேவராஜன், தர்மராஜன் (C T. B.), இரத்தினராஜன் (பிரதம எழுதுநர் — கச்சேரி, முல்லைத்தீவு), இரத்தின பாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் சின்னத்துரையின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03 05-2000) புதன்கிழமை வற்றாப்பளையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
இரா. இராசநாயகம்
(மருமகன்)

கூத்தாடியம்பதி,
அல்வாய் வடக்கு.
அல்வாய். (75963)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் ( இம்மாதம் 3 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(138521ஏ), (139649ஏ), (142150ஏ),

**யாழ்ப்பாணம்**

(141117ஏ),

**கோப்பாய்**

(128151ஏ), (128151பி), (134345ஏ), (134345பி), (136576ஏ), (136581ஏ), (136581பி), (136581சி), (136654ஏ), (136654பி), (136664ஏ), (136664பி), (136668ஏ), (136670ஏ), (136670பி), (136670சி), (136672ஏ) (136672பி), (136672சி), (136697ஏ), (136697பி), (143217ஏ), (143221ஏ), (143272ஏ), (143272பி), (143277ஏ), (143277பி), (143321ஏ), (143401ஏ), (143402ஏ), (143415ஏ), (143418ஏ), (143419ஏ), (143419பி), (143421ஏ), (143449ஏ), (143454ஏ), (143456ஏ), (143457ஏ), (143460ஏ), (143461ஏ(, (143473ஏ),

**நல்லூர்**

(139433ஏ), (139433பி), (139433சி), (139433டி), (139906ஏ), (141021ஏ), (141118ஏ), (141118பி), (143182ஏ), (148182பி), (143261ஏ), (143261பி), (143273ஏ), (141186ஏ), (141186பி), (142054ஏ), (142054பி), (147433ஏ), (147434ஏ).

**சண்டிலிப்பாய்**

(141250 ஏ),(141250 பி), (141250 சி), (141250 டி), (141250 ஈ), (141250 எவ்), (141834 ஏ),

**தெல்லிப்பழை**

(141761 ஏ), (141886ஏ), (141886 பி), (141886 சி), (141937 ஏ), (147035 ஏ),

**உடுவில்**

(136341 ஏ), (136341பி), (136700 ஏ), (136700 பி), (139911 ஏ), (139911 பி), (139911 சி), (143225 ஏ), (143225 பி), (143246 ஏ), (143263 ஏ), (143263 பி), (139714 ஏ), (141956 ஏ), (142016 ஏ), (147019 ஏ),

(க(

# உசன், மிருசுவில் பகுதிகளில் ஆள் இல்லாத வீடுகளில் திருட்டு!

நெல்லியடி, மே 4

உசன், மிருசுவில் பகுதிகளில் ஆள்கள் இல்லாத வீடுகளின் கதவுகள் அலவாங்கு கோடரி போன்றவற்றால் உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை பகல் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தற்பொழுது இங்கிருந்த மக்கள் கொடிகாமத்துக்கு அப்பால் இடம்பெயர்ந்து உள்ளனர்.

மிருசுவிலில், புனிதநீக்கிலஸ் தேவாலயம், திருக்குடும்ப கன்னியர்மடம், றோ. க. த. க. பாடசாலை உள்ளிட்ட பகுதிகளிலும், சில வீடுகளிலும் படையினர் தங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மிருசுவில் தபாலகம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் கொடிகாமம் தபால் நிலையத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகவும் மிருசுவிலில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கக் கடைகளும் கொடிகாமத்துக்கு அப்பால் மாற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் தென்மராட்சியிலுள்ள ஆசிரியர்கள் இதுவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கையெழுத்திட்டு வந்தனர். எனினும் நேற்று முன் தினம் முதல் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் ஒப்பமிட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சிக்கு சேவையில் ஈடுபட்ட போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் நேற்று முன்தினம் முதல் கொடிகாமம் வரையுமே சேவையாற்றி வருகின்றன. (இ-109)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 565 முன்பள்ளிகள்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு வரை 565 முன்பள்ளிகள் செயற்பட்டு வந்ததாக அறிக்கைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த முன்பள்ளிகளில் 518 முன்பள்ளிகள் பதிவு செய்யப்பட்டும் மிகுதி 47 முன்பள்ளிகளும் பதிவு செய்யப்படாமலும் செயற்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு இந்த 565 முன்பள்ளிகளிலும் 12 ஆயிரத்து 682 சிறுவர்கள் கல்வி கற்றுள்ளதுடன் 708 ஆசிரியைகளும் கல்வி கற்பித்துள்ளனர்.

இந்த ஆசிரியைகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளை கியூடெக் உட்பட அறவழிப் போராட்டக்குழு, சர்வோதயம், தென்னை பனம் பொருள் கொத்தணி மற்றும் பிரதேச சபைகள் ஆகியனவே வழங்கி வருகின்றன.

பிரதேச செயலக ரீதியாக முன்பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு:- யாழ்ப்பாணம் — 28, சாவகச்சேரி — 87, பருத்தித்துறை — 50, கரவெட்டி — 54, கோப்பாய் — 66, தெல்லிப்பழை — 25, உடுவில் — 42, சங்கானை — 46, சண்டிலிப்பாய் — 34, ஊர்காவற்றுறை—25, வேலணை — 24, நெடுந்தீவு — 06, நல்லூர் — 48, மருதங்கேணி — 16, பளை — 14. (இ-10)

# இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 4

இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தியேட்டர் லேன், இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் ஜெயராஜலிங்கம் (வயது 33) என்ற இளைஞரே ஊரெழு இராணுவத்தால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கு அவர் இல்லாத காரணத்தால் ஊரெழு முகாமுக்கு வருமாறு கூறிவிட்டுச் சென்றனர். பின்பு முகாமுக்குச் சென்ற பொழுது அங்கு வைத்து அவர் கைது செய்யப்பட்டார். கைது தொடர்பாக இராணுவத்தால் பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10-5)

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய்

## ஒவ்வொரு வாரமும் வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே.4

ப.நே.கூ.சங்கங்கள் ஊடாக குடும்பம் ஒன்றுக்கு ஒவ்வொரு வாரமும் இரு லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்வதென நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எரிபொருள் விநியோகத்தினை சீராக்குவது தொடர்பான கூட்டம் யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள்,பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏரிபொருள் விநியோகம் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

*விவசாய தேவைகளுக்கு மாதாந்தம் 2 லட்சத்து 50 ஆயிரம் லீற்றர் மண்எண்ணெயை ஒதுக்கீடு செய்தல் இந்த மண்எண்ணெய் விநியோகம் விவசாய சம்மேளனங்களின் சிபார்சுடன் கமநல சேவை ஆணையாளரின் பொறுப்பில் நடைபெறல் வேண்டும்.

*கார் ஒன்றுக்கு மாதம்40 லீற்றர் பெற்றோலும்,மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 10 லீற்றர் பெற்றோலும் பிரதேச செயலர்களின் சிபார்சுடன் விநியோக அட்டைகள் மூலம் விநியோகித்தல்.

*மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட, காப்புறுதிக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட கார்,மோட்டார் சைக்கிள் போன்றவற்றுக்கே பெற்றோல் விநியோகம் செய்யப்படும்.

*மினிபஸ் மற்றும் லொறிகளுக்கு நாளொன்றுக்கு 25 லீற்றர் டீசலும், லான்மாஸ்டர் மற்றும் உழவு இயந்திரங்களுக்கு 10 லீற்றர் டீசலும் விநியோகம் செய்யப்படும்.

இந்த தீர்மானங்களை இன்று முதல் அமுலுக்கு கொண்டு வருவதெனவும் முடிவு செய்யப்பட்டது. (இ-5)


## அறிவித்தல்

### அவசர கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களுடனான அவசர கலந்துரையாடலொன்று யாழ்.அரச அதிபர் தலைமையில், யாழ்.அரச செயலகத்தில் நாளை (05-05-2000) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக் கலந்துரையாடலுக்கு மேற்படி சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களை தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**செ.கு.சண்முகநாதன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்.மாவட்டம்.**

*கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனை,*
*857, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/12033)



## விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

1999 க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றிய 36 மாணவர்களில் உயர்தரத்திற்குத் தகுதி பெற்ற 32(89%) மாணவர்களான

| | | | |
|---|---|---|---|
| 1.இ.யசோதரன் | 8D | 1C | 1S |
| 2.கி.ஹடகோபன் | 7D | 2C | - |
| 3.து.சுதர்சினி | 6D | 3C | 1S |
| 4.பா.தர்சிகா | 6D | 3C | 1S |
| 5.வீ.கலைவாணி | 6D | 3C | - |
| 6.யோ.தேவகி | 5D | 5C | - |
| 7.க.குமுதா | 3D | 6C | - |
| 8.யோ.குகேந்தினி | 3D | 6C | - |
| 9.கோ.கோமதி | 2D | 7C | 1S |
| 10.க.துவாரகா | 2D | 7C | 1S |
| 11.தி.விமலினி | 2D | 6C | 2S |
| 12.க.யாழினி | 1D | 7C | 2S |
| 13.கு.தயாழினி | 1D | 8C | - |
| 14.ச.குகநந்தினி | 1D | 8C | - |
| 15.ச.விஜயகுமார் | 1D | 6C | 1S |
| 16.க.தவரூபபதி | 1D | 3C | 3S |
| 17.க.உதயரூபன் | - | 7C | 2S |
| 18.ப.சிவஜீவன் | - | 7C | 1S |
| 19.சி.கலைமதி | - | 6C | 3S |
| 20.ந.கலையரசி | - | 5C | 4S |
| 21.மு.தனோஜன் | - | 4C | 4S |
| 22.க.தவரூபரமேஷ் | - | 4C | 4S |
| 23.கி.நந்தகுமார் | - | 4C | 4S |
| 24.தெ.கஜென் | - | 4C | 4S |
| 25.கு.வசந்தரூபன் | - | 4C | 4S |
| 26.க.சுதாரஞ்சினி | - | 4C | 3S |
| 27.க.கஜேந்திரன் | - | 3C | 5S |
| 28.த.குபேந்திரன் | - | 3C | 5S |
| 29.து.சிவமாலினி | - | 3C | 5S |
| 30.மா.கிறிஸ்ரீபன் | - | 3C | 5S |
| 31.அ.அம்பிகாவதி | - | 3C | 4S |
| 32.ஞா.கவிதா | - | 3C | 3S |

ஆகியோரைப் பாராட்டுகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| 1.சமயம் | 100% | 6.விஞ்ஞானம் I | 86% |
| 2.தமிழ் | 100% | 7.விஞ்ஞானம் II | 86% |
| 3.சமூகக்கல்வி | 100% | 8.சங்கீதம் | 69% |
| 4.விவசாயம் | 97% | 9.கணிதம் II | 66% |
| 5.கணிதம் I | 92% | 10.ஆங்கிலம் | 22% |

இத்தகைய உச்ச விளைவை ஏற்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன்2000 ஆண்டுக்கான வலய மட்ட மெய்வல்லுமைப் போட்டியில் **1ஆம் இடங்கள் 5, 2ஆம் இடங்கள் 7, 3ஆம் இடங்கள் 8.** ஆகியவற்றைப் பெற்றுத்தந்ததன் மூலம் **51 புள்ளிகளை** இப்பாடசாலைக்குப் பெற்றுத்தந்த மாணவர்களான

| | |
|---|---|
| 1.கோ.கோமதி | 7.வீ.கலைரூபி |
| 2.அ.அம்பிகாவதி | 8.வே.சுரேஜினி |
| 3.பா.சுதர்கர் | 9.க.கீர்த்தனன் |
| 4.மு.கிருஷ்ணகாந்தன் | 10.ம.பிரபாத் |
| 5.ந.சுஜித்தா | 11.நா.நிலாந்தினி |
| 6.ம.மயூரதி | 12.ந.மஞ்சுளா |

ஆகியோரையும் பாராட்டுகின்றோம்.

*பெற்றோர், பழைய மாணவர்கள்.*

(C/12030)


### அம்பனில் படை முகாம்

வடமராட்சி,மே4

அம்பன் பகுதியில் மீண்டும் படையினரின் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இ-173)

### செயலமர்வு

குருநகர்,மே4

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புக்களில் கலை, வர்த்தக பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டம் தொடர்பான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை இடம்பெறவுள்ள இந்த செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் சகல ஆசிரியர்களையும் கேட்டுள்ளார். (இ-7-51)

### நிவாரணம் மீசாலையில்

யாழ்ப்பாணம்,மே4

பளையிலிருந்து இடம்பெயர்ந்து இதுவரையும் ஏப்ரல் மாதத்துக்குரிய இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறாதவர்களைப் புத்தூர் சந்தி மீசாலையில் இயங்கும் பளை ப.நோ.கூ. சங்கக் கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு பளைப் பிரதேச செயலர் எஸ்.புத்திசிகா மணி கேட்டுள்ளார்.

பளை ப.நோ.கூ. சங்கத்தில் இயங்கிய கூட்டுறவுக் கிராமிய வங்கி கொடிகாமத்தில் இயங்கி வருவதால் பளையைச் சேர்ந்தவர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை இந்த வங்கி ஊடாக மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (இ-5)

### பேச்சுப் போட்டி

கொழும்புத்துறை, மே4

சரசாலை - நுணாவில் அருள்மிகு ஸ்ரீ சிதரம்பர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சரசாலை இந்து இளைஞர் மன்றம் மாணவர்கள் மத்தியில் பேச்சுப் போட்டி ஒன்றினை எதிர் வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆலய மண்டபத்தில் நடத்தவுள்ளது. (இ-7-30)

### திரைப் படக்காட்சி

யாழ்ப்பாணம்,மே4.

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப் படவட்டமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மகேந்திரனின் "மெட்டி"என்னும் திரைப்படம் எதிர் வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பல்கலைக்கழக புவியியற்துறையின் மூன்றாம் இலக்க அறையில் காண்பிக்கப்படுகிறது.

தமிழில் வெளிவந்த மாற்று சினிமாப்பட வரிசையில் "மெட்டி" படக்காட்சி இரண்டாவதாக இடம் பெறுவதாக புவியியற் துறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார். (இ-7)

# மன்னம்பிட்டியில் 15 இளைஞர் கைது

மட்டக்களப்பு,மே4

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான மன்னம்பிட்டியில் 15 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் பொலீஸார் கடைகளுக்குள் நுழைந்து அங்கு பொருள்களை வாங்கிக் கொண்டிருந்த இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 15 பேரும் பொலீஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் மன்னம்பிட்டியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-க-10)

# இடம்பெயர்ந்தோருக்கு 200 கொட்டகைகள்

## முதல் கட்டமாக அமைக்க முடிவு

யாழ்ப்பாணம்,மே4

தற்போதைய யுத்த சூழலினால் இடம்பெயர்ந்தவர்களுக்கென தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் முதல் கட்டமாக 200 குடியிருப்புக் கொட்டகைகளை அமைப்பதென நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் மற்றும் செயலக அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

200 குடியிருப்புக் கொட்டகைகளுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் 44 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குருநகரிலுள்ள மீன்பிடி நிலையத்தைப் புனரமைக்க ஐ.நா. தூதரகத்தினால் 3லட்சத்து 85 ஆயிரம்ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

### திருப்பணி வேலைகள்

சரசாலை பெரியத்தாய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. சரசாலை வாழ் மக்களினதும்,வெளிநாட்டில் வாழ்கின்ற சரசாலை மக்களினதும் நிதி உதவியுடன் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதாக ஆலய பரிபாலனசபைத் தலைவர் ந.பரமசாமி தெரிவித்தார். (இ-7-30)

### நூல் வெளியீடும் நாட்டுக் கூத்தும்

வடமராட்சி,மே4

யாழ்.ஜெயம் எழுதிய நூல்கள் வெளியீடும், புனித ஆசீர்வாதப்பர் நாட்டுக்கூத்தும் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளன.

யாழ்.ஆயர்பேரருட்திரு.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நூல்களை வெளியிட்டு வைத்து ஆசியுரை வழங்குவார்.

அருட்திரு போல் நட்சத்திரம், அருட்திரு செ.அன்புராசா, ஏ.எஸ். அகஸ்ரின் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். (இ-173)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா ஆறுமுகம்

(ஆசாரியார்)

நயினாதீவு 5ஆம் வட்டாரம் காளிகோவிலடியைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் (ஆசாரியார்) நேற்று (03-05-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், பங்கஜலட்சுமி, உலகேஸ்வரி, யோகேஸ்வரி, ஞானயோகலிங்கம் (ஞானம் - ஸ்ரீ மூகாம்பிகை மரவேலைத் தொழிற்சாலை), ஸ்ரீவரதராஜன் (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), லலிதாதேவி (சுவிஸ்), கிருஷ்ணவேணி (ஜேர்மனி), புஷ்பலீலாவதி, யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகராஜா (மெக்கானிக் - குட்டி), பாலசுப்பிரமணியம், திருஞானசம்பந்தன், கோகுலராணி, லோகி (ஜேர்மனி), விஜி (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராசா (சுவிஸ்), இராசகுலேந்திரன் (ஜேர்மனி), மதனராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (05.05.2000) வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிவரவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ஞானயோகலிங்கம்**
(ஞானம் - மகன்)

*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (75985)

### கந்தையா துரையப்பா

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா துரையப்பா நேற்று (03-05-2000) புதன்கிழமை மாலை சிவபதமடைந்தார்.

அன்னார் திருமதி து.இராசம்மாவின் அன்புக் கணவரும், ஐ.இராசரத்தினம் (N.A.R. & Co. வாசனைத் தொழிற்சாலை, இணுவில்), திருமதி மா.இரத்தினமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, தாவடி இ.த.க. பாடசாலை), ஐ.கனகரத்தினம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஐ.துரைராசா, திருமதி த.மல்லிகாதேவி (நீர்கொழும்பு), ஐ.சந்திரராசா (ஆசிரியர், பூண்டுலோயா ம.வி.), ஐ.மனோகரன் (ஆசிரியர், தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் சிறிய தந்தையும், மா.இராசரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), இ.பரஞ்சோதி, து.குணலட்சுமி, செ.தருமராஜா (நீர்கொழும்பு), சந்திராவதி, சுமத்திராதேவி, வசுந்திராதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-05-2000) வியாழன் முற்பகல் 11-30 மணிக்கு இணுவில் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ஐ.இராசரத்தினம்**
(N.A.R. & Co., இணுவில்)

*பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,*
*இணுவில் தெற்கு.* (75986)

### திருமதி தம்பிமுத்து மாணிக்கம்

கீரிமலை வீதி, சித்தன்கேணியை வதிவிடமாகக் கொண்ட காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தம்பிமுத்துவின் அன்பு மனைவி மாணிக்கம் நேற்று (03.05.2000) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமசிவத்தின் பாசமிகு தாயாரும், செல்வமணியின் அன்பு மாமியாரும், தவசீலன், சயந்தன், பவானி, பாமினி (சுவிஸ்), இராஜகோபால், செல்வரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராமலிங்கம், தவராசா (மொரிசியஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சித்தன்கேணியில் இன்று (04-05-2000) வியாழக்கிழமை நடைபெற்று தகனக்கிரியை விளாவெளி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**த.பரமசிவம்**
(மகன்)

*கீரிமலை வீதி,*
*சித்தன்கேணி.* (சி/12034)

# இராணுவத் தரப்பிலும் மறுப்பு

யாழ்ப்பாணம்,மே4

"யாழ்.குடாநாட்டில் சுமார் 40ஆயிரம் இராணுவத்தினர் அடைபட்டு இருப்பதாகவும், அவர்களை விடுவிக்க இந்திய இராணுவத்தின் உதவியை இலங்கை ஜனாதிபதி கோரியுள்ளதாகவும் இந்திய தூரதர்ஷன் தொலைக்காட்சி சேவையில் வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது."

- இவ்வாறு பலாலி இராணுவ தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தற்போது இராணுவத்தினர் குடாநாட்டில் தமது பணிகளைச் சீரான முறையில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது." - இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பத்திரிகையாளரிடம் பொலீஸார் விசாரணை

மட்டக்களப்பு,மே4

கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் இரா. துரைரட்ணம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று இரண்டு மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த மாதம் 21ஆம், 22 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு நகரில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர்களுக்கான செயலமர்வு சம்பந்தமாகவே இவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி செயலமர்வில் கலந்து கொண்டவர்களின் பெயர் விவரங்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இவரிடம் இருந்து பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திர தினமான நேற்று பத்திரிகையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (உ-7)

# ம.எண்ணெய் எடுத்துச் சென்றோர் நேற்று படையினரால் சோதனை

அரியாலை,மே4

யாழ். நகரப்பகுதியில் கான்களில் மண்எண்ணெய் கொண்டு சென்றவர்கள் அனைவரும் படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நகரப்பகுதியில் மண்எண்ணெய் கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே படையினர் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதிகளில் கான்களில் மண் எண்ணெய் கொண்டு சென்றவர்களிடம் அதற்கான பற்றுச்சீட்டுக்களைக் கேட்ட படையினர் 5லீற்றருக்குமேல் எவரும் மண்எண்ணெய் எடுத்துச் செல்லக்கூடாது எனவும் அறிவுறுத்தினர்.

இதேவேளை நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு நேற்று நேரில் சென்ற படையினர் ஒரு லீற்றர் மண்எண்ணெய்க்கு மேல் எவருக்கும் விநியோகிக்கக் கூடாது என அறிவுறுத்தல் வழங்கினர் எனவும் தெரியவந்தது. (உ-7-17)

## செஞ்.கப்பல் இன்று வரும்

கொழும்பு,மே4

கொழும்பில் சிகிச்சைக்காகச் சென்றிருந்த ஒரு தொகுதி நோயாளர்களை ஏற்றிக் கொண்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வருகின்றது.

திருகோணமலையில் இருந்து நேற்றுப் புறப்பட்ட இந்தக் கப்பலில் 18 நோயாளர்கள் அழைத்து வரப்படுகின்றனர். குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 109 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## குண்டு வீச்சில் ஒருவர் பலி!

மட்டக்களப்பு,மே4

மட்டக்களப்பு கல்லடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் தனது வீட்டின் முன்னால் நின்று கொண்டிருந்த தமிழ்க் கட்சி ஒன்றின் முன்னாள் உறுப்பினரான சதீஸ்வரன் என்பவர் உயிரிழந்தார்; மேலும் 4பேர் காயமடைந்தனர். (உ-7)

## வவுனியாவில் "ராகிங்"கேவலம்

வவுனியா,மே4

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி பெற்ற புதிய மாணவர்கள் பலர் நேற்றுக் காலை கல்லூரியின் மைதானத்தில் நிர்வாணமாக ஓடவிட்டு ராகிங்குக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் மேற்படி மாணவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்த சிரேஷ்ட மாணவர்கள் அவர்களை உடற்பயிற்சிக்கு வருமாறு அழைத்துச் சென்று உள்ளாடை அணியாமல் உடற்பயிற்சியில் ஈடுபடுமாறும்-

பின்னர் மைதானத்தைச் சுற்றி ஓடுமாறும் -

பணித்தனர் என செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்தது.

## இலங்கைக்கு இந்திய அரசு கடிதம்

சென்னை,மே4

தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கைகளை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்து இந்திய வெளிவிவகார அமைச்சு இலங்கை அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.

தமிழ்நாட்டு முதல்வர் மு.கருணாநிதி இந்தத் தகவலை நேற்றுச் சட்டமன்றத்தில் தெரிவித்தார். நாகப்பட்டினம் அருகே கடந்த வெள்ளியன்று மூன்று தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக சட்டமன்றத்தில் இடம் பெற்ற காரசாரமான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (உ-6)

## மட்டக்களப்பில் மறியல் போர்

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலை வழங்கப்படாததைக் கண்டித்து நகரிலுள்ள காந்தி சதுக்கத்தில் நேற்று மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர். (உ-7)

## இந்திய இரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பது சாத்தியமாகலாம்.

புலிகளைப் பின்னடையச் செய்வதற்கு வெளிநாட்டுப் படையினரின் உதவி நாடப்படுவது சாத்தியப்படாது என்று கூறப்பட்டாலும் அதனை முற்றாக நிராகரித்துவிட முடியாது. - இவ்வாறு அவர் கூறினார். (உ-6-7-9)

# திருமலையிலிருந்து பயணிகளை 'லங்கா முடித்த' ஏற்றிவரும்

கொழும்பு,மே4

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு இன்னும் சில தினங்களில் 'லங்கா முடித்த' கப்பல் பயணிகள் சேவையில் ஈடுபடும் என்று அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் உறுதியளித்துள்ளதாக திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வி. வேலும்மயிலும் தெரிவித்தார்.

தற்போது காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'லங்கா முடித்த' கப்பல் அங்கிருந்து திருகோணமலை திரும்பியதும் அது திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்கான தனது பயணிகள் சேவையை நடத்தும் என்றும் - அவர் மேலும் கூறினார்.

கடந்த மாதம் 9 ஆம் திகதியே 'லங்கா முடித்த' கப்பல் கடைசியாக பயணிகள் சேவையில் ஈடுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாணம் வருவதற்காக சுமார் 4 ஆயிரம் பேர் திருகோணமலையில் காத்து நிற்கின்றனர்.

'லங்கா முடித்த' யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு வாய்ப்பு ஏதும்உண்டா என்பது தெரியவில்லை. (உ-6-9)

## யாழ்.குடாநா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுமே படையினர் நிலைகொண்டிருந்தனர். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. தொடர்ந்தும் முன்னேறப் புலிகள் எண்ணினால் அவர்கள் பெரும்பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டி ஏற்படும்.

இந்திய இராணுவத்தை மீண்டும் அழைக்க வேண்டும் என்று கூறுவது ஏளனத்துக்குரியது. நாம் அப்படி அழைக்க விரும்பவில்லை.

அன்று இந்தியப்படை இங்கிருப்பதை எதிர்த்தவர்கள்தான் இன்று இந்தியப்படை வரவேண்டும் என்கின்றார்கள். இவர்கள்தான் இப்போது நோர்வேயின் சமாதானமுயற்சிகளை எதிர்த்து வருகின்றார்கள். காலம் செல்ல நோர்வேயின் சமாதான முயற்சிகளின் அவசியத்தை உணர்ந்து அது தேவை என்று இவர்களே கூறுவார்கள். எனவே இத்தகையோரை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை.

இப்போதைய நிலைமைகளை எதிர்கொள்வதற்காக சில நட்பு நாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளது. அவ்வளவே.

யாழ்ப்பாண மோதல்களால் மீண்டும் 1983ஆம் ஆண்டு இடம் பெற்ற இனக்கலவரத்தைப் போன்று ஒன்று உருவாக இடமளிக்கப்படமாட்டாது. இதற்காக மாவட்ட, பிராந்திய, கிராம மட்டங்களில் விழிப்புக் குழுக்கள், மதக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

புலிகள் மீது உக்கிரமான தாக்குதல் நடத்தப்பட வேண்டும். அதற்காக அப்பாவித் தமிழர்களைத் துன்புறுத்த நாம் இடமளிக்கக் கூடாது.

- இவ்வாறு ஜனாதிபதி மேலும் கூறினார். (உ-6-7-9)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இக்கூட்டத்தில் இந்தியாவின் முப்படைத் தளபதிகளும் கூடப் பங்குபற்றினர்.

வடபகுதியில் முன்னேறிக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகளை எதிர்நோக்க வேண்டியுள்ள அரச படையினரை அங்கிருந்து வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில், அதற்கு இராணுவ ரீதியில் உதவி எதனையும் வழங்குவது உட்பட, இலங்கையில் இந்தியாவின் எந்தவிதமான இராணுவத் தலையீடும் இருக்காது என்று அவர் கூறியுள்ளார்.

"சிக்கியிருக்கும் அரச படைகளை வெளியேற்ற உதவும்படியான கோரிக்கை எதனையும் இலங்கை இன்னும் உத்தியோக பூர்வமாக எமக்கு விடுக்கவில்லை. அத்தகைய உதவிகள் கோரப்பட்டாலும் அதை வழங்கவேண்டிய கடப்பாடு ஏதும் இந்தியாவுக்கு இல்லை.

"இலங்கையில் இந்தியாவின் இராணுவத் தலையீடு என்பதற்கே இடமில்லை.

"ஒன்றுபட்ட இலங்கையின் கட்டமைப்புக்குள் எல்லா இன மக்களும் தங்கள் அபிலாசைகளை அடையும் வகையில் இந்தியா இலங்கையுடன் கலந்தாலோசித்து தேவையான மனிதாபிமான நடவடிக்கைகளை எடுக்கும்.

"ஏற்கனவே இந்தியா ஒரு லட்சம் இலங்கை அகதிகளுக்குப் புகலிடம் அளித்துள்ளது.

"இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடான இலங்கைக்கு, அனைத்து இலங்கை மக்களும் விரும்பும் அமைதி விரைவில் திரும்பும் என நம்புகிறோம். அமைதி ஏற்பட இந்தியா தனது பங்களிப்பைச் செய்யத் தயாராக இருக்கிறது." - இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-6-7-9)


தனது வெற்றிகரமான 21 ஆவது வருட சேவைப் பூர்த்தியினை முன்னிட்டு வழங்கும்

IN VIEW OF OUR 21 ST ANNIVERSARY

விசேட சலுகை!

கட்டணத்தில் 25% கழிவு

JTI

COMPUTER COURSES

புதிய பயிற்சிகள்

ஆரம்பம்: 06.05.2000 (3.00 pm)

மேலதிக விவரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

NO.7 Palaly Road, Jaffna.

- DIRECTOR

(75976)



யாழ். மறைவட்ட புனித பத்திமா அன்னை யாத்திரைத் தல பெருவிழா

பண்டத்தரிப்பு

13-05-2000

இன்று : கொடியேற்றம்

தினமும் மாலை 5 மணிக்கு வழிபாடுகள்

திருநாள் திருப்பலி சனிக்கிழமை (13.05.2000) 7.30 மணிக்கு, பக்தர்கள் நலன் கருதி காலை 5 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பக்தர்களே வருக !!!

பத்திமா அன்னை பரிந்துரைக்க செபிப்போம்.

சுவாமி ம.பெ.ஞானரத்தினம்

பரிபாலகர்,

பண்டத்தரிப்பு.

(75959)



வீடியோ CD வெளியீடு

லிவிங்ஸ்டன், மகேஸ்வரி நடித்த

அதே மனிதன்

மாதவன், ஷாலினி நடித்த

அலைபாயுதே

திரையரங்குக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விஷ்ணு வீடியோ

K.K.S. றோட்,

கோண்டாவில். (75988)



திரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

A/L 2001

பொருளியல்

அரசு பொதுப் பொருளாதாரம்

ஆரம்பம் : 06.05.2000

சனி 8 மணி

By: திரு.பி.சண்

(75957)



SUBRA (14)

சித்தன்கேணி

O/L DAY CLASS

பிரிவு III

ஆரம்பம்

நாளை 5.5.2000

வெள்ளி காலை 7.00

(இரவுபிரிவு இலவசம்)

(75925)



முக்கிய அறிவித்தல்

யாழ் பல்கலைக் கழக முகாமைக் கற்கைகள் வணிக பீட இறுதிவருட 'A' பிரிவு, 'B' பிரிவு மாணவர்களின் குழுப் புகைப்படங்களை நாளை 05-05-2000 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் அனைத்து'A' பிரிவு, 'B' பிரிவு மாணவர்களையும் குறித்த நேரத்துக்கு சமுகம் தருமாறு அழைக்கிறோம்.

வணிக மாணவர் மன்றம்,

முகாமைத்துவ மாணவர் மன்றம்,

யாழ் பல்கலைக்கழகம்.

(75977)



விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS (08.30-2.00)

பிரிவு 4 அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

பிரிவு 5 வெகுவிரைவில்.

(75972)



NEW SCIENCE COLLEGE

(யாழ்ப்பாணம்)

இணைந்த கணிதம்

A/L 2002 நிலையியல்

சனி, ஞாயிறு (12.15 p.m)

A/L 2001

(i) ஒரு தளவிசைகளின் சமநிலை

(ii) உராய்வு (iii) சட்டப்படல்

சனி, ஞாயிறு (10.00 a.m)

A/L 2000 எளிமை இசை இயக்கம்

சனி,ஞாயிறு (8. a.m)

அகனத்து அலகுகளும் 06.05.2000 சனி ஆரம்பமாகும்.

A.பத்மநாதன்.

(75979)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.